மருத்துவர் மன்றம்

திங்கள் வெளியீடு



தாழ்வுற்று வருமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு
நின்ற பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த

காந்தி மகான்

அக்டோபர், நவம்பர்மீ

விலை 25 காசு

பொருளடக்கம்

		பக்கம்
1.	நாட்டில் நல்ல தொழில்	1
2.	தீ யாண்டுப் பெற்ருள் (சு. ந. சொக்கலிங்கம், M.A.) ...	4
3.	தீல்வாத நோய்களும் சிகிச்சை முறைகளும் (டாக்டர் A. E. சண்முகம்)	7
4.	நூருண்டு வாழ்க்கையின் இரகசியம் (முகில்வண்ணன்)...	13
5.	அழகிற்கு அடிப்படை முடிதிருத்தும் கலை (எம். ஏ. ஆர்)	19
6.	வாழவேண்டுமானல்...? (M. ராஜகோபால்) ...	22
7.	மருத்துவர்களே நீங்கள் சிந்திப்பதுண்டா ? (எம். ஏ. ஆர்)	25
8.	வரலாற்றில் முடிதிருத்தும் கலை (சு. குணாளன்) ...	29
9.	குழந்தை பிணியும் நிவர்த்தியும் (ச. ஆறுமுகநாதன், S. P. M.)	38
10.	கருங் கடற்கரை (சு. ந. சொக்கலிங்கம், M.A) ...	41
11.	ஈரடி இருநூறு இனிய செய்யுள் தொடர்கள் (இளவழகனர்—அழகரடிகள்) ...	45
12.	அமரர் காந்தி	47
13.	சுகாதாரமும் சுகவாழ்வும்	51
14.	பாராட்டுக் கூட்டம்	53
15.	நாட்டுக்கு நல்லவை	56

மருத்துவர் மன்றம் மாத வெளியீடு

ஆண்டு சந்தா 3—50 6 மாத சந்தா 2—00

தனிப்பிரதி 25 காசு

வெளிநாடுகளுக்கு

ஆண்டு சந்தா 5—00 6 மாத சந்தா 3—00

தனிப்பிரதி 30 காசு.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏஜண்டுகள் தேவை. வேண்டிய பத்திரிகைகளுக்கு கிரயப்படி முழு தொகையும் கட்டவேண்டும். தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரங்களுக்கு :

ஆசிரியர், மருத்துவர் மன்றம். 5/81, பிராட்வே, சென்னை.

மருத்துவர் மன்றம்

திங்கள் வெளியீடு

ஆசிரியர்: M. A. இராமகிருஷ்ணன்

அணுவு ளவனு மவனு ளணுவுங்
கணுவர நின்ற கலப்பதுணரா
நிணையிலி யீசனவ னெங்குமாகித்
தணிவர நின்றான் சராசரந்தானே.

மலர் 1	பிலவ௵ கார்த்திகை-அக்டோ. நவம்பர் மீ 1961	இதழ் 3, 4

நாட்டில் நல்ல தொழில்

மனித சமூகம் என்று உற்பத்தியானதோ அன்று அழிவும் உற்பத்தியானதே. அதைத் தடுக்கவே அவனோடு மருத்துவமும் உற்பத்தியானது. அதன் துணைவனாகக் கலையழகு தரும் முடியைச் சீர்த்திருத்தியமைத்து கண்குளிரக் காணும் முடிதிருத்தும் கலையும் உண்டாயின. இவை மனிதனோடு தோன்றி மனிதனோடு அழியுமே தவிர இடையில் மற்ற தொழிலைப்போல அழிவதும் தோன்றுவதுமல்ல. ஆனால் இந்த தொழிலுக்கு நமது தமிழ் நாட்டில் முக்கியத்வம் கொடுக்க மக்களும் அதன் அரசாங்கமும் மறுக்கிறது. சேத்தைக்கண்டு சிலுத்துக் கொள்வதும் அதில் முளைக்கும் செந்தாமரையைத் தெய்வ மலராக ஒப்பிட்டு உணர்ச்சி வசப்படுவதும் கவிபாடுவதும் நம் நாட்டில் உண்டு. அது போலத்தான் நமது தொழிலைப் பயன்படுத்திக் கொண்டு அதைச் செய்யும் மக்களை உதாசீனம் செய்கிறார்கள். இது நமது நாட்டின் பழக்கம். இன்று சென்ற இதழில் நீங்கள் கண்ட விழுக்கம் கிராமம் ஒரு எடுத்துக்காட்டு அதைப் போல ஆயிரம் விழுக்கம் கிராமம் உண்டு என தஞ்சாவூர் மாவட்ட நண்பர் எழுதுகிறார். விமோசனம் இல்லையா? எனக்கேட்கிறார். இந்த இழிநிலையை அடிமை மனப்பான்மையை நாமே

போக்கிக்கொள்வது சுலமாகத் தெரியவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மூவேந்தர் மரபில் தன் இனத்திற்குள்ளே பிளவை வளர்த்து அதற்குப் பின் தோன்றிய ஆட்சியிலே அடிமையாகி இனத்தை மறந்து அன்னியன் உறவில் மயங்கி தன் இன உறவை அடியோடு மறந்துவிட்ட தமிழர் இனத்திலே வேற்றுமையென்ற குப்பைக் கீரையைத் எத்தனைத் தடவைப் பிடுங்கினாலும் மீண்டும் முளைத்துக் கொண்டே இருப்பதுபோலவே தமிழர்களிடம் இனத்துவேஷம் வளர்க்கிறது. தமிழனின் இனப்பற்று வளராததற்காக எந்தக் கட்சியாவது கவலைப்படுகிறதா இல்லை. எறிகிற வீட்டில் பிடிங்கியது லாபம் என்பது போல அரசியலில் பதவி வேட்டைக்காக தமிழன் பகடைக் காயாக மாறிமாறி உருட்டப்படுகிறான். இந்தக் கோணத்திலே தான் ஏராளமான குதம்பக் கட்சிகளும், அதன் தலைவர்களும் தமிழ் நாட்டில் மலிந்து கிடக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்தாலன்றி நாமாக இன்னும் நூறுவருடம் வேண்டினாலும் கொக்கு வக்காவாக முடியாது.

ஆதலால் இதை சர்க்கார் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாகிவிட்டது. கிராமங்களிலும் நகரங்களிலும் மருத்துவ சமூகம் எந்தெந்த வகையில் தங்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் தடைபடுகிறார்கள் என்பதையும், வாழ்க்கைக் வசதி, குடி இருப்பு வசதி, தொழில் வசதி, உத்தியோக வசதி மற்றும் ஏனைய கல்வி வசதி கிராமாந்திரங்களில் கூலி வசதி, அடக்குமுறை அநியாயம், மனித தன்மையற்ற வகையில் செல்லுமாறு துன்பப்படுத்தல் இவைகள் சர்க்கார் மூலம் ஒரு அதிகாரியை அதாவது பொதுவான மனப்பான்மை நேர்மையுள்ளம் உடைய ஒருவரால் விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆங்காங்கு உள்ள மருத்துவர் சங்க ஊழியர்களை அதிகாரியுடன் அழைத்துக்கொள்ள வேண்டும்.

நமது முடித்திருத்தும் தொழிலைச் சிறிய கைத்தொழில் பட்டியலில் சேர்க்கவேண்டும். சேர்க்க முடியாவிடினும் இத்தொழில் வளர்ச்சிக்குப் பொருளுதவி பேர்பாதி மானியமாகவும், பேர்பாதி கடனாகவும் கொடுத்து உதவவேண்டும். சேலம் ஜில்லாவில் முடிதிருத்தும் தொழிலாளருக்கும், சலவை தொழிலாளருக்கும் சேர்த்து 40 பேர்களுக்கு 40,000 நாற்பதினாயிரத்திற்கு கருவிகள் வாங்க உதவியதாக அமைச்

சர் திரு. கக்கன் அவர்கள் சொன்னார்கள் என பத்திரிகையில் வெளியாயின. ஆனால் முடிதிருத்தும் தொழிலாளர் சிலருக்கு தான் செலவுபோக 200 ரூபாய் (இருநூறு) கிடைத்தது என கூறுகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்களில் ஒரு சிலருக்கு கொடுத்து இச்சமூகத்தின் அதிருப்தியைச் சர்க்கார் யேற்றுக் கொண்டது என அமைச்சர் அவர்களே கூறுகிறார்கள். இந்த திட்டம் திருப்தி யளிக்காது வாழ்க்கையை வளம்பெறச் செய்யாது என்பது உறுதி. மிகப் பிற்போக்கில் உள்ள இத் தொழிலை முன்னேற்றமடையச் செய்வதற்குப் புரட்சிகரமான முடிதிருத்தும் கருவிகள், ஒப்பனை அலங்காரக் கூடங்களுக்கு வேண்டிய கட்டிட வசதிகள் முடிந்த இடங்களில் சர்க்காரே கூட்டுறவு முறையை வளர்க்க ஒவ்வொரு நகரங்களிலும் ஏற்பாடு செய்யலாம். முக்கியமாக சுகாதாரப் பாதுகாப்பு இத்தொழிலில் முன்னே நிற்கிறது. எல்லா மனிதர்களையும் ஒரு டாக்டரைப்போல அவரது ஆயுதங்களைப் போலவே அதைவிட நுட்பமாகவோ கருதக்கூடிய தொழில் என்பதை மறக்கக்கூடாது. உடலின் மயிர்க்கால்கள் வழியே செல்லும் வியாதிகளும் இதில் தொடர்பு உடையது. இத் தொழிலைச் செய்பவரும், அவரது கருவிகளும், செய்துக் கொள்பவரும் அவரது உடல் நிலையையும் நுட்பமாக கவனிக்க வேண்டியவை. பொதுவாக நாட்டில் செய்திகள் வியாதியின் கூறுகள். மருத்துவர்கள் மூலமே முன்னோர்கள் அறிந்து கொண்டிருந்தார்கள் என்பது கர்ண பரம்பரையாகக் கூறுவதை மறுக்க முடியாது. மனித வளர்ச்சிக்கும் நாகரீகத்திற்கும் முக்கியமான கேந்திரஸ்தானமான இத் தொழிலைச் சர்க்கார் அலட்சியப் படுத்துவது தீமையை வளர்ப்பதாகும். உலகில் சுகாதாரமான பகுதியில் இது மிகமிக விசேஷமானது என்பதை மறுக்க முடியாது. மரத்தடிகள் சாலை ஓரங்களில் சுகாதார மற்ற முறையில் முடித்திருத்தும் தொழிலாளிகளை அப்புறப்படுத்தி அவர்களுக்கும் தொழிலுக்கும் முதலில் சர்க்கார் உதவி மான்யமாகவே கிடைக்கச் செய்வது ஆரம்ப காலத்தில் நல்லது எனக் கருதுகிறோம். நாட்டில் மக்கள் தொடர்புடைய இத்தொழிலை முதன் முதல் கவனிக்க வேண்டியது அவசியம் என ஞாபகப்படுத்துகிறோம். கிராமங்களில் இவர்கள் ஒதுக்குப்புரமாக வாழ்கிறார்கள் என்பதையும் முதலில் வாழ்க்கை வசதி தொழில் வசதி இவைகளைச் சர்க்கார் கவனிக்கும் என எதிர்ப்பார்க்கிறோம்.

தீயாண்டுப் பெற்றாள்

சு. ந. சொக்கலிங்கம் M. A.

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்பு வாழ்ந்த புலவர். இவருடைய முப்பாலில் எப்பாலவர்க்கும் பொதுவான கருத்துக்களை எழுதியுள்ளார். அறம், பொருள், இன்பம் ஆகிய முக்கூறுகளையும் திறம்பட வரைந்துள்ளார். இவர்க்குப்பின் பிறந்த எல்லாப் புலவர்களும்; இவரைப் போற்றியும் புகழ்ந்தும் வந்துள்ளதோடு, சொல்லையும், பொருளையும் பொன்னேபோல் போற்றித்தத்தம் இலக்கியங்களில் ஏற்ற பெற்றி அமைத்துக் கொண்டுள்ளனர்; இவரிடம் குறை கண்டபுலவனோ இவரின் நிறை உணராத புலவனோ இல்லை என்று உறுதியுடன் கூறலாம். ஒவ்வொரு மதத்தினரும் தம்மைச் சார்ந்தவர் வள்ளுவர் என்று சொல்வதில் ஆனந்தம் கொள்கின்றனர். எனவே எக்காலத்தவர்க்கும், எம்மதத்தவர்க்கும், எல்லாமொழியினர்க்கும், எல்லா நிலையினர்க்கும்—ஏன் எல்லோருக்கும் பொதுவான கருத்துக்களைக் கூறுவதால் இதைப் பொதுமறையென ஏற்றுகிறார்கள்.

> "வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
> உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி"

என்று மனோன்மணீயம் என்ற நாடகத்தை இயற்றிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் நாவார மனமாரப் பாராட்டுகிறார். இதுவரை உலகமக்கள் படைத்த இலக்கியங்கள் எல்லாவற்றிலும், மிகச்சிறந்த, தலையாய இலக்கியம் வள்ளுவன்குறள் என்பதை ஆல்பர்ட் ஸ்வெயிட்ஸர் என்ற ஜெர்மானிய ஞானி நெஞ்சாரப் போற்றுகிறார். தமிழ்மாணவரான போப்அவர்கள் இந்நூலை உளமாரப் பாராட்டியுள்ளார்.

மனம் பண்படுகிற இடம் காதல்வாழ்க்கை. மனம் பயன்படும் இடம் பொதுவாழ்க்கை; மனம்வாழும் இடம் தனிவாழ்க்கை. காமத்துப்பாலில் மனம் பண்படும் வகையை விளக்கியுள்ளார்; பொருட்பாலில் மனம்பயன்படும் விதத்தைக்

கூறியுள்ளார்; அறத்துப்பாலில் மனம்வாழும் திறத்தைச் செப்பியுள்ளார்.

தூய்மை இல்லாவிடில், மனம் காதல்வாழ்க்கையில் பண்படுவதில்லை; பொதுவாழ்க்கையில் பயன்படுவதில்லை; தனி வாழ்க்கையில் வாழ்வதில்லை. தூய்மையே மனத்தின் ஆற்றல் என்றும் மனத்தூய்மையே அறத்தின் அடிப்படை என்றும் நன்ருக உணர்ந்தவர் வள்ளுவர்.

வள்ளுவர் எதையும் சுருக்கமாகவும், திட்பமாகவும், நுட்பமாகவும் கூறும் ஆற்றல் படைத்தவர். குறட்பாவில், எக்காலத்திற்கும் நிலைபேறுடைய கருத்துக்களை அழகுற அமைத்திருக்கிருர். 1330 அருங்குறட்களை இயற்றியுள்ளார். அவற்றை 133 அதிகாரங்களாகப் பகுத்துள்ளார். ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறள் பாக்கள் அமைந்துள்ளன. எந்தப் பொருளைக் குறித்தும், பத்துப்பாக்களுக்கு மேலும் பாடவில்லை; பத்துபாக்களுக்குக் குறைவாகவும் பாடவில்லை. ஒழுங்கைப் பின்பற்றிய ஒழுங்குடைய பெருங் கவிஞராகிய இவர், உயிரெழுத்தின் முதலெழுத்தாகிய ‘அ’கரத்தில் தொடங்கி, மெய்யெழுத்தின் கடைசியெழுத்தாகிய ‘ன்’ என்ற எழுத்தில் நூலைமுடிக்கும் திறனைக் கண்ணுறும் போது இறும்பூதெய்துகிறோம்.

அறத்துப் பாலில், வள்ளுவர் அறவோராகத் திகழ்கிருர், பொருட்பாலில், பொருளியல் வல்லோராக இலங்குகிருர். காமத்துப்பாலில் மாட்சிமிக்க புலவராகத் துலங்குகிருர். காமத்துப்பாலிலுள்ள பாக்களைப் படிக்கப்படிக்க, இன்பம் மேலிடும். மன இயலை உணர்ந்தமுறையையும், காதற்கருத்துக்களை நுட்பமாக விளக்கும் நெறியையும் நோக்க, நோக்க அப்புலவரின் நுண்மாண் நுழைபுலத்தை உணரலாம். இன், ‘புணர்ச்சி மகிழ்தல்’ என்ற தலைப்பில் இவர் இயற்றியுள்ள ஒரு குறளைச்சுவைக்க முயல்வோம்.

தலைவனும், தலைவியும் கூடிமகிழ்ந்தார்கள். தலைவியைத் தலைவன் பலவாறு புகழ்ந்தான்; போற்றினன் இவற்றைக் கேட்ட தலைவிக்கு நகையும், உவகையும் ஏற்பட்டன. தலைவியைவிட்டுப் பிரிவதற்கு மனம்வரவில்லை. திருமணம் ஆகாத காரணத்தால் தலைவியோடுசேர்ந்து இருக்கவும் கூடவில்லை. இவளைத்தவிர இப்பிறவியில் வேறுயாரையும் அவன் மணக்கப்போவதில்லையாயினும், ஊரறியத் திருமணம் செய்து கொள்ளாததால் இவளைவிட்டுப்பிரிய வேண்டியுள்ளது. சில

நாட்களுக்கு ஒருமுறையோ, சிலவாரங்களுக்கு ஒருமுறையோ இவளைச் சந்திக்கிறான். பகலில் சந்திப்பதற்கு இடர்வருகிறது; இரவில் சந்திக்க முயல்கிறான்; இதற்கும் தடைவருகிறது.

எண்ணிப் பார்க்கிறான்; ஆம் இவளோடு சேர்ந்திருக்கும் போது இன்பமாக (குளிர்ச்சியாக) இருக்கிறது. இவளை விட்டுப் பிரிந்ததும் கவலையாக இருக்கிறது; நெஞ்சு சுடுகிறது நெருப்பை நினைத்தான்; ஒப்பிட்டான்; புதுமை கண்டான்.

நெருப்பின் பக்கத்திலிருந்தால் சுடுகிறது; விலகித் தூரத்தில் சென்றால் சுடுவதில்லை. ஆனால் தலைவியிடம் ஒரு புதுமையான நெருப்பல்லவோ இருக்கிறது என்று நினைத்தான்; ஒரே வேடிக்கையாக இருந்தது. இதை அழகுபடவள்ளுவர் கூறிய முறையைப் பார்க்கலாம். நீங்களும் அந்தப்புதுமையை உணர்ந்து புது இன்பம் காண்பீர்கள்.

"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீ யாண்டுப் பெற்றாள் இவள்".

[தெறூஉம்—சுடுகின்றது. தண்ணென்னும்—குளிர்ச்சியாக இருக்கிறது)

இவளை அணுகினால் சுடுவதில்லை; நெருப்பை அணுகினால் சுடுகிறது; இவளைப் பிரிந்தால் சுடுகிறது; நெருப்பைவிட்டுப் பிரிந்து சென்றாலோ சுடுவதில்லை. இது ஒரு விந்தையான நெருப்பாக இருக்கிறதே; இந்த நெருப்பை யாரிடமிருந்து பெற்றாள்? எங்கிருந்து பெற்றாள்? இவ்வாறு இக்குறளில் நம்மைச் சிந்திக்கத்தூண்டுகிறார்.

பவானி மருத்துவர் சங்கம் நிர்வாகக் குழுக் கூட்டம்

9-10-61 B. S. திருமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது துணைத்தலைவர் B. K. முருகையன், M. பழனியப்பன், D. T. செல்லமுத்து, B. A. பரமசிவம், B. V. சித்தையா முதலானோர் பேசினர். நமது முடிதிருத்தும் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் கருவிகள் வாங்கித் தருவதென தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

கீல்வாத நோய்களும் சிகிச்சை முறைகளும்

(டாக்டர் A. E. சண்முகம்)

[சென்ற இதழில் ஆங்கில முறை சிகிச்சைகளைப் பற்றி விவரித்து எழுதினேன். இவ்விதழில் ஆயுர்வேத முறை சிகிச்சைகளைப்பற்றி எழுதுகிறேன். மருத்துவ நண்பர்கள் படித்துப் பயன் அடைவார்களாக.]

"நோய் நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்பது திருக்குறளாகும்.

அதாவது நோயை அதன் குறிகளால் அறிந்து அதைத் தீர்க்கும் வழியைத் தெரிந்து அவ்வழியே நோயைத் தீர்ப்பது தான் சிறந்த வைத்தியமாகும். இவ்வழி நடந்தோர் பலர். அவர்கள் பல வியாதிகளைத் தீர்த்தார்கள், வைத்தியத் தொழிலில் பேரும் புகழும் பெற்றார்கள். இம்முறை அறிந்தோர் இக்காலத்தில் சிலரே ஆவர். காரணம் ஆயுர்வேத வைத்தியம் நலிந்திருப்பதேயாகும். மேலும் ஆயுர்வேதம், சித்தவைத்தியம் என்றாலே சிலருக்கும் பிடிப்பதில்லை ஏனெனில் அது நாட்டு வைத்திய முறை. அதில் கஷாயம், சூரணம் எனக் கசப்பு மிகுந்த மருந்துகள்தான் அதிகம். இம்மருந்துகள் நோயைத் தீர்க்குமோ தீர்க்காதோ என்ற சந்தேகங்கள் வேறு. ஆனாலும் அதைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அம் மருந்துகளை எப்படி சாப்பிடுவது எனத் துன்பமடைந்து, உட்கொள்ள முடியாதே என நினைப்போரும் உளர். அப்படிப்பட்டவர்களை பலவந்தப்படுத்தி மருந்துகளை உட்கொள்ளச் செய்தாலும் மூக்கைப் பிடித்துக் கொண்டு தான் சாப்பிடுவார்கள். காரணம் நாட்டு மருந்துகளின்மேல் அவ்வளவு வெறுப்பு அவர்களுக்கு உண்டு. சிலர், இந்த வைத்திய முறையே வேண்டாம், நாட்டு மருந்துகளைச் சாப்பிடுவதுமல்லாமல் அநுமானமாக கஷாயம் சாப்பிடுதலும், தேன், இஞ்சிச் சாற்றில் கலந்து சாப்பிடுவதுபோன்ற விஷயங்கள் அவர்களிற்குப் பிடிக்காதவை. மற்றவர்களின் கருத்து, செயல்முறை, விருப்பு, வெறுப்பு, எப்படியிருந்தா

லும் என் சொந்தக் கருத்தும் தேவைதானே? அஃது யாதெனில் நாட்டு வைத்திய முறை சிறந்தது; மேலானது; பூரணமாக நோயைக் குணப்படுத்தும் குறையுங்கூட என்பதேயாகும். ஆதலால்தான் அறிவிற்சிறந்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் நம்நாட்டு மருந்துகளை மேல்நாட்டார் மாத்திரைகளாகவோ, பவுடர்களாகவோ, திரவ மருந்துகளாகவோ இனிப்புச் சேர்த்துத் தயாரித்து பற்பல வியாதிகளுக்கும் இம்மருந்துகளை. உபயோகப்படுத்தி நிறையச் செலவு செய்து மருந்துகளை விற்பனை செய்துதரும் Medical Representatives போன்ற சிப்பந்திகளை ஏற்பாடு செய்து பெருத்த அளவில் (Mass production) உற்பத்தி செய்து பரந்த அளவில் விற்பனை செய்து மிகுந்த லாபமடைந்து தனவந்தர்களாகுகின்றனர். நம் நாட்டு மருந்துகளைக்கொண்டு புதிய முறைகளில் மருந்துகளை உற்பத்தி செய்து அவர்கள் தம் கண்டுபிடிப்பு என உரிமை கொண்டாடுகின்றனர். நம் நாட்டுப் பணம் ஏராளமாக இவ்வழியில் வெளிநாட்டிற்குச் செல்கிறது.

நம் நாட்டு வைத்திய முறை, ஆராய்ச்சிகள் இவைகளில் ஏன் குறை ஏற்பட்டது? பிற்காலத்தில் இந்த வைத்திய முறை ஏன் நலிந்தது? நம் நாட்டு வைத்தியர்கள் சிறந்த முறையிலே தான் வைத்தியம் செய்துவந்தனர். சில காலத்திற்கு முன் ஒரு வைத்தியர் நோயாளியின் கைநாடியைப் பார்த்தே அவனது நோய், அவனது இறுதிக்காலம் (இறக்கும் காலம்) முதலியவைகளை மணி நிமிடம் குறிப்பிட்டுச் சொன்னவர் இருந்தார். இப்படிப்பட்டவர்கள் அல்லவோ நம் நாட்டின் இரத்தினங்கள். அந்த இரத்தினங்கள் அழியவே நம்நாட்டு வைத்தியம் பிரகாசமற்று மங்கிக்கிடக்கிறது. சில வைத்திய சிகாமணிகள் சுயநலமே உருக்கொண்டவர்கள் தான்தான் வைத்தியம் செய்யவேண்டும், தனக்குத்தான் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும், பிறருக்குத் தன் வைத்தியத்தைச் சொல்லித்தரக் கூடாது என்று தன்னுடனே சிறந்த வைத்திய முறைகளையும் எடுத்துச் சென்றுவிட்டனர். அதாவது அவர்கள் காலமானதும் அவர்களது இரகசியமான சிறந்த, அனுபவ வைத்திய முறைகளும் அவர்களுடனேயே அழிந்துவிட்டன. ஆம் அவர்களுடனேதான் அவர்கள் சிறந்த தயாரிப்பு முறைகளும் மறைந்துவிட்டன. காரணம் அவர்கள் தம் சந்ததிகளுக்குக்கூட அம்முறைகளைச் சொல்லிக் கொடுக்கவில்லை; மறுத்துவிட்டனர். அம்முறைகளை இரகசியமாகவே வைத்துக்கொண்டு, தாம் அழிந்ததோ

டல்லாமல் நம் நாட்டு வைத்திய முறைக்கும் இழுக்குத் தேடிச் சென்றனர். அதனால் சிறந்த அனுபவமான கைமுறை வைத்தியங்கள் மறைந்துவிட்டன. காரணம் தங்களுக்கு வேண்டியவர்களுக்காவது, சந்ததிகளுக்காவது இம் முறைகளை அவர்கள் சொல்லிக் கொடுக்காமையேயாகும் அல்லவா?

நம் நாட்டில் பல நூற்றுண்டுகளுக்கு முன்னேயே லட்சுமணன் பச்சிலை, கிரந்தி நாயகம் முதலிய மூலிகைகளை உபயோகித்து நன்மையடைந்து வந்தனர். ஆனல் இப்பொழுது அயல் நாட்டினர் நம் நாட்டின் பச்சிலைகளின் நோயைப் போக்கும் திறன் அறிந்து அதனுடன் சிற்சில மருந்துகளைச் சேர்த்து அவைகளின் சக்தியைப் பெறச் செய்கிருர்கள். அந்த மருந்துகளை இதர பிராணிகளுக்கும், மானிடர்களுக்கும் கொடுத்து நோய்தீர்க்கும் திறன் ஆராய்ந்து தக்கபடி பொதுமக்களின் பார்வையைக் கவரும்படி கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்கின்றனர்.

இதைப்போல நம் நாட்டிலும் ஆராச்சியின் மூலம் நவீனமான மருந்துகளைத் தயாரித்து பிரபலப் படுத்துவார்களேயானல், எல்லாவிதமான வியாதிகளையும் போக்குவதோடு நம் நாட்டு வருமானமும் (National income) பெருகச் செய்யலாம். நம்நாட்டுப் பணமும் அந்நியநாட்டினருக்குச் செல்வதையும் தடைப்படுத்தலாம். நம் நாட்டு மருத்துவங்களும் புதிய முறையில் தயாரிக்கப்பட்டு பலரும் விரும்பும்படியான வகைகளில் மாத்திரைகளாகவோ, பவுடர்களாகவோ, திரவமருந்துகளாகவோ புகுத்தப்பட்டு மேல்நாட்டுத் தயாரிப்புகளுடன் நோயைப் போக்கும் முறையில் சிறந்து விளங்குமல்லவா? நம் நாட்டினர் இவைகளைச் செய்வார்களா? அரசாங்கம் இதைப்பற்றி முயற்சி எடுத்து தனிப்பட்டோருக்குப் பண உதவி [State aid) செய்யுமா? இனியும் பொறுத்துப் பார்ப்போம்.

மிளகு என்பார்கள் தமிழ் வைத்தியர்கள் அதையே வடமொழியில் உள்ள ஆயுர்வேதத்தில் மரிச்சம் என்பார்கள். இதைப்போலவே ஆடாதோடைக்கு வாதுகா என்னும் பெயர் உண்டு. இரு முறைகளிலும் உள்ள ஒரே ஒரு மருந்து, அவரவர் முறைகளில் வெவ்வேறு விதமாக அழைக்கிருர்கள். சிலர் ஆயுர்வேதம் வடமொழியில் உள்ள நூல்; வடமொழி மருந்துக்கள் அடங்கியது; இம்முறை நம் நாட்டுக்குத் தேவையில்லை; நாம் இம்முறையைப் பயிலக்கூடாது; இதைத் தெரிந்துகொள்வதும் பாவம்; என்போரும் இன்னும் இருக்

கின்றனர். கொஞ்சம் பகுத்தறிவுகொண்டு ஆராயுங்கள், தென்னாட்டுச் சித்தர்கள் போன்று வடநாட்டில் வாழ்ந்த சரகர், அசுருதர், சாரங்கர், வாக்படர் முதலானோர் வைத்திய அறிவு நிரம்பப் பெற்றவர்கள். அறுவை வைத்திய முறையும் தெரிந்தவர்கள் பல அறுவை ஆயுதங்களை நன்கு உபயோகிக்கும் முறைகளையும் அனுபவ வாயிலாக அறிந்தவர்கள். தங்கள் அனுபவங்களை வடமொழியில் சம்ஹிதைகளாகவும், சூத்திரங்களாகவும் பாடி நமக்குத் தந்திருக்கின்றனர். அவைகளைக் கொண்டுதான் தற்சமயம் சென்னையில் உள்ள College of Indegeneous Medicine and Hospital இயங்குகிறது. அங்கு வரும் நோயாளிகளுக்கு கஷாயம், தைலம், லேகியம் போன்ற ஆயுர்வேத மருந்துகள் கொடுக்கப் படுகின்றன. இது தவிர சித்தம், யூனனி, ஆங்கிலமுறை மருந்துகளும் அங்கு இப்போது கையாளப்படுகின்றன. விஞ்ஞானக் கணக்குப்படி சுமார் 6000 வகைக் கிருமிகள் நம்மைச் சுற்றிலும் எப்பொழுதும் காற்றில் பறந்துகொண்டிருப்பதாகச் சொல்லுகின்றனர். இக்கிருமிகள் நம் உடலுக்குள் சென்றால் ஒவ்வொரு வகை நோயை உண்டாக்கும். ஒவ்வொரு விநாடியும் நாம் இந்த 6000 வகைக் கிருமிகளின் தாக்குதலினின்றும் தப்பித்துக் கொள்ளவேண்டும். இக் கிருமிகளில் மூட்டைப் பாதிக்கும் கிருமிகளும் உண்டு.

மனிதன் வளையவும், நெளியவும், குனியவும், நிமிரவும் இதர பல காரியங்களைச் செய்யவும் இந்த மூட்டுக்களின் பக்குவ இணைப்பால்தான் முடிகிறது. உடலில் பல பாகங்களிலுள்ள இந்த மூட்டுக்களை தசை நார்கள் இணைத்து வைத்திருக்கின்றன. இந்தத் தசை நார்களைக் கீல்வாதக் கிருமிகள் தாக்கி நாசம் செய்யும்போது மூட்டுக்களின் இயக்கச் சக்தி பலவீனமடைகிறது. இக்காரணத்தினல்தான் மூட்டுக்கள் சிறுத்து அல்லது வீக்கமடைந்து அழற்சியுற்று அவ்விடத்தில் மூட்டுப் பெருத்து, சிவந்து குத்தலும், குடைச்சலும் ஏற்படுகிறது. மூட்டுக்களைப் பாதித்த பாகங்களை நீட்டவோ, மடக்கவோ முடிவதில்லை. வலியுடன் சிலருக்கு மலபந்தம் இருப்பதுமுண்டு.

கீல்வாத ரோகங்கள் இந்தவிதக் காரணங்களினல்தான் உண்டாகின்றன என்று வரையறுத்துக் கூறமுடியாது என்றாலும் மருத்துவர்களுக்கு விளக்கும்பொருட்டு சிற்சில முக்கியமான காரணங்களைக் குறிப்பிடுகின்றேன்.

1. புசித்த உணவு நன்கு சீரணமாகாமையால் உண்டாகலாம்.

2. ஒன்றுக்கொன்று விரார்த்த குணமுள்ள ஆதாரங்களை மிதமிஞ்சி புசிப்பதாலும் ஒருவித விஷம் (தோஷம்) உடலில் ஏற்படுகிறது. இவ்விஷம் வெகு துரிதமாக உடலெங்கும் வியாபித்து மூட்டுக்களைப் பாதிக்கிறது. இதைக் குணப்படுத்த உஷ்ண சிகிச்சையே மேலானது.

3. வெறுக்கப்படுவதும் வயிற்றுப் பொருமல் உண்டாக்குவதும் கருகிக் காந்திப்போனதும், பக்குவமாகாததும், அதிக குளிர்ச்சியாயிருப்பதும் அசுத்தமானதும், உலர்ந்து போனதும் நெஞ்செரிவு முதலிய அழற்சி உண்டுபண்ணும். ஆகாராதிகளே கீல்வாத ரோகங்களை (ஆமவிஷத்தை) உண்டாக்கும் பண்டங்களாம். ஆமவிஷம் என்பது சரிவரச் சீரணிக்கப் படாதனவாய் ஏற்படும் ஒரு கோளாறு இது மூட்டுக்களைப் பாதிக்கும்போது ஆயுர்வேதத்தில் ஆமவாதம் என்பார்கள். சித்தர்கள் கீல்வாதம் கீல்பிடிப்பு நோய்கள் என்பார்கள்.

4. வயிற்றில் உற்பத்தியாகும் ஜடராக்கினி பலவீனப் படுவதால் சாப்பிட்ட ஆகாரங்கள் பதனழிந்து ஆமதோஷத்தை உண்டாக்கலாம்.

5. நெருக்கமான இடங்களில் குடியிருப்பதாலும், சீதளக் கோப்பான இடங்களில் வசிப்பதாலும், சிறிய அறைகளில் ஐந்தாறு பேர் அடைந்து தூங்குவதாலும் இவ்வியாதி உண்டாகலாம்.

6. கெட்ட பெண்களின் சேர்க்கையாலும், இயற்கைக்கு முரணான செயற்கை வழிகளில் தங்கள் இளமைச் சக்தியை வீணாக்குபவர்களுக்கும் இந்நோய் வரக்கூடும்.

7. தாய் தகப்பனுருக்கு இந்நோயிருந்து பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்நோய் பரவலாம். ஆகவே இதை ஒரு பரம்பரை நோய் எனவும் சொல்லலாம்.

8. மனைவி மாதவிலக்காயிருக்கும் போது சில கணவன்மார்கள் பிடிவாதமாய் உடற் சேர்க்கை வைத்துக்கொள்வதால் அதிக உஷ்ணம் உண்டாகி இருதயம், மூளை, கண் முதலிய பாகங்களைத் தாக்கி கைகால் பிடிப்பு, மயக்கம், பிடரி நரம்புகளில் வலி, தலைவலி முதலியவைகளும் உண்டாகின்றன.

ஆயுர் வேதம் தெரிந்தோர் நோய்கள் உண்டாக மூன்று வித தோஷங்கள் தான் காரணம் என அறிவார்கள். அவைகள் முறையே வாதம், பித்தம், சிலேத்துவம், (கபம்) என்பவையாம். இவைகளை முத்தோஷங்கள், தினதோஷங்கள், மூன்று தாதுக்கள் என்றும் அழைப்பார்கள். இவை கோளாறடைந்தால் உடலைச் சீரழிக்கவும், சரியான நிலையில் இருந்தால் உடலை ஆரோக்கியமான நிலையில் வைத்திருக்கவும் உதவுகின்றன. இவை உடல் முழுவதும் பரவியிருந்தாலும் வாதம் தொப்புளுக்குக் கீழேயும், பித்தம் தொப்புள் இருதயம் இவைகளுக்கு நடுவிலும், கபம் இருதயத்திற்கு மேலும் மூக்கியமாக இடம் பெற்றுள்ளன. இவைகளில் வாதம் மேலிட்டால் குடல் கடினமாகவும், பித்தத்தினல் மிருதுவாகவும், கபத்தினல் கடினமாயில்லாமலும், மிருதுவாயில்லாமலும் நடுத்தர (மத்திப)மாக இருக்கும்.

அவைகள் அறுவகைப்படும். அவைகளில் இனிப்பு, புளிப்பு, உப்பு, வாததோஷத்தையும், கசப்பு, காரம் துவர்ப்பு இவை கபதோஷத்தையும், துவர்ப்பு, கசப்பு, இனிப்பு, இவை பித்ததோஷத்தையும் தணியச் செய்பவையாம்.

★

சூளைமேடு சவரத்தொழிலாளர் சங்கம் பொதுக்கூட்டம்

9-10-61 அன்று சங்கத்தலைவர் N. சிவானந்தம் அவர்கள் தலைமையில் அரிசன நல இலாகா டைரக்டர் R கப்பிரமணியம் அவர்கள் சங்கப்பெயர்ப் பலகையைத் திறந்துவைத்து பரிசு வழங்கினுர். மற்றும் ஜே. ஜே. ம. துரைராஜ் எம். வி. கணபதி நாயக்கர் (ம. கா. க. தலைவர்) கலைஞர் மணப்பந்தல் அசோகன் மற்றும் பலர் பேசினுர்கள். கோ. சி. வடிவேல் செயலாளர் அவர்கள் அடியிற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி நன்றிகூற கூட்டம் இனிதே முடிந்தது.

அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தில் சங்க மெம்பர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும்படி வலியுறுத்தப்பட்டது.

31-10-61-ல் ஜெ. சம்பத் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் கூட்டத்தில் R. பெரியசாமி தலைவராகவும் V. K. குஞ்சுராமன் துணைத் தலைவராகவும் கோ. சி. வடிவேல் செயலாளராகவும் கோ. கிருஷ்ணன் துணைச் செயலாளராகவும் பொ. சுப்பையா பொருளாளராகவும், S. கிருஷ்ணன், எம். ஆர். சந்திரன் கி, பட்டுதுரை, வி. இராசு, ரெ. கோவிந்தசாமி S. S மணி, பழனிவேல், R. கிருஷ்ணமூர்த்தி, ப. சுப்பிரமணியன், பார்த்தசாரதி, மணி ஆகியோர் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நூறாண்டு வாழ்க்கையின் இரகசியம்

முகில்வண்ணன்

மனமும் கருநிலையும்

தாயின் கர்ப்பப்பையில் பனித்துளி போன்ற மனித விந்து பத்துமாதங்கள் அங்கு வளர்ந்துவரும் காலமே நல்லதையும் கெட்டதையும் மனோதத்துவரீதியிலே அமைக்கும் கருப்பருவம். இங்கே, நல்ல நிலத்தில் நல்லவிதையைத் தூவிவிட்டால் நன்றாக முளைவிட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விதையில் பழுதில்லை நிலத்தில் பழுதில்லை இடையிலே வேளை தவறாமல் நீர்பாய்ச்சியும் நிலைமையறிந்து நீரைவடிகட்டியும் ஓயாது கவனம் முழுவதும் அதில் செலுத்தினால் அன்றி நல்லநாற்றையும் பயிரையும் பலனையும் காணமுடியாது. அது போலவே தாய் அருந்த தானருந்தும் இளங்கருவிற்கு அதைச்சுற்றியுள்ள (கருவைசுற்றி) எல்லா அவையவங்களும் இயற்கையின் நிலையிலிருந்து மாறாமல் பார்த்துக்கொள்வது மனம்தான். தாய்செய்யும் ஒவ்வொரு செயலும் நினைக்கும் எண்ணங்களும் குழந்தையின் கருவிலே பதிவாகிறது.

நல்ல எண்ணங்கள் இரத்தத்தை சுத்தமாக வைத்திருக்கிறது. கொடிய எண்ணங்கள் இரத்தத்தை இயற்கையிலேயே கெடுத்து நஞ்சுத்தன்மையை உண்டாக்குகிறது. பொதுவாக ஆரம்ப கருவுற்றப் பெண்கள் இரண்டு மூன்று திங்களில் சேதமடைந்து உதிரமாக வெளிவருவதைப் பார்க்கிறோம். இவை மனத்தில் ஏற்பட்ட கலக்கம், திகில் அல்லது ஓயாது எதையாவது எண்ணி எண்ணி விசாரப்படுவதால் ஏற்படும் மாறுதலேயாகும். இந்த கரு அமைப்பிற்கும் மனத்திற்கும் நேர் பொருத்தமுண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது. மனிதனின் அறிவு, ஆற்றல், ஆண்மை யாவும் கருவில் அமைவதே கடைசிவரை உடலோடு மறைகிறது. இந்த உண்மையறிந்தே திருமூலர் "விந்துதித்தபோது வந்துதித்தவாறு" என்றார்.

ஆணும் பெண்ணும் உண்மையன்புடன் கட்டுக்கடங்காத இன்பமும் மாசற்ற உள்ளமும் நோயற்ற உடலும் அன்றலர்ந்த மலர்போல இருக்குமானால் அவர்கள் மனமொத்த

மெய்யுணர்ச்சித் தாயின்கருவில் பதிவாகிறது என்பதற்குத் தான் அப்படிக் கூறுகிறார் இந்த மறுக்கமுடியாத எண்ணத் தைத் தான் அவனவன் விதிப்பிரகாரம் நடக்குமென்கிறோம். இதைத்தான் ஔவை, "இட்டமுடன் என்றலையில் இன்ன படி என்றெழுதி, விட்ட சிவனும் செத்துவிட்டானோ, முட்ட முட்ட பஞ்சமேயானாலும் பாரம் அவனுக்கன்னாய் நெஞ்சமே யஞ்சாதே நீ" என்கிறார். தலையெழுத்தென்பதும் கருவின் அமைப்பேயாகும். ஆரம்ப கருவுற்பத்திக்கே நல்லதொரு மன அமைப்பை உருவாக்காவிடில் மண்பாண்ட தொழிலாளிக்கு அடிப்படைமண் நல்லதொரு களிமண்ணாக அமையாவிடில் எப்படி நல்ல ஒரு மண்பாண்டம் உருவாகாதோ அப்படியே நல்ல ஒரு மனிதனையும் பெறமுடியாது என்பதில் சந்தேக மில்லை. அவனவன் செய்த வினைப்பயன் என்றுகூட பழக்கத் தைச் சொல்வதுண்டு. வினைவிதைத்தவன் வினை அறுப்பான் தினைவிதைத்தவன் தினையறுப்பான் என்று சொல்கிறோம் அல்லவா? வினை-செயல் எந்த எண்ணத்தோடு கருயமைப்பில் இருந்தானோ அந்த எண்ணத்தையே பலனாக அடைகிறான் விஞ்ஞான மேதைகளுக்குத் தோன்றும் கருப்பொருளெல் லாம் நம்போன்ற சாதாரண மனிதனுக்கு விளங்குவதில்லை விளங்கிக்கொள்ள விரும்புவதுமில்லை. ஆனால் அணுவிலும் கருவிலும் பலவிந்தையைக்கண்ட விஞ்ஞானியை நாம் பைத்தியக்காரனாகக் கருதிய காலம் ஒன்றுண்டு. அத்தகைய நிலைபோன்று ஆணும் பெண்ணும் ஒன்றுசேரும் கூட்டுறவும் காதல் என்ற உயிர்ப்பொருள் தொட்டால் குளிர்ந்திருக்கும் தொலைசென்றால் சுட்டெரிக்கும் தன்மை வாய்ந்த அந்த தெய்வீக இயற்கை நியதியை முறையோடு நாம் நேசித்து பலன்காணவில்லை. மனம்போன வழியெல்லாம் மங்கயரை மறித்தோம், நினைத்தபோதெல்லாம் புசித்தோம், விரும்பிய போதெல்லாம் தூங்கினோம் ஆனால் பசித்தபோது புசிக்க வில்லை. உணர்ச்சிகண்டு அணைக்கவில்லை, நேரங்கண்டு தூங்கவில்லை இன்று நமது வாழ்க்கையில் அன்றாடம் காணும் உண்மை இந்த நிலையிலே பொருத்தமில்லா செயல் புரிந்துவரும் நாம் பொருத்தமற்ற மனிதஇனத்தை நீண்ட ஆயுளும், அறிவும், ஆண்மையும் உள்ள ஒருவனைப் படைக் கும் திறனுள்ளவர்களாக எப்படியாகலாம் என்பதைச் சிந்தித் துப் பாருங்கள்.

தினைவிதைத்தவன் தினையையே அறுப்பான்

இல்வாழ்க்கையில் இன்பத்தைமட்டும் குறிக்கோளாகக் கொண்டோமே தவிர அதன் விளைவு நாம் நம்மை அறியாமலே நாம் தேடிக்கொண்ட ஒன்றென்று எந்த மனிதனும் ஒப்புக்கொள்வதில்லை. விளைவு நல்லதாயினும் கெடுதலாயினும் எல்லாம் இயற்கையின் செயல் என பழியைப் போட்டுவிடுகிறோம். என்பதை நிதானித்தால் விளங்காமல் போகாது. இரும்பை உருக்கி வார்த்து சிலைவடிவாக்கும் கலைஞனும் கல்லை உடைத்து சிலைவடிவாக்கும் கலைஞனும் உள்ளத்தில் உருபெற்ற கருவையே செயலில் வடிக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் நாம் வடிக்கும் மனித சிலைக்கு நுண்ணிய ஆலம் விதையில் மன்னர் மன்னர்களும் படைகளும் தங்க நிழல்தரும் வானமளாவிய பிரம்மாண்டமான ஆலவிருட்சம் தூங்குவது எப்படி விந்தையோ; அப்படியே நமது தாதுப்பொருளில் கண்ணுக்குத் தெரியாத அணுவினும் சிறிய நுண்ணிய புழுவிலே நம்போன்ற மனிதன் தூங்குகிறான் என்பது மறுக்க முடியாத விந்தை. இந்த விந்தையை நுண்ணறிவால் ஆராய்ந்து காலத்தை கணக்கிட்டுப் பெண்ணும் ஆணும் எந்த மனோநிலையில் மனித சிலையை வடிக்கவேண்டும் என்று திட்டத்தை உருவாக்கிய பின் செயலில் இறங்கியதுண்டா? இல்லை. ஒரு விஞ்ஞானி தான் காணவேண்டிய பொருளில் எத்தனை நாட்கள் தன் உள்ளத்தையும் அறிவையும் நிலை நிறுத்தி அப்பொருளை ஆராய திருப்பித் திருப்பித் தன் கருத்தை நிலைநிறுத்தி ஓயாது சலியாது பாடுபடுகிறானே அதே தன்மையை நாம் நமது மனித உற்பத்தியின் ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு நிதானமிழக்காமல் காலம் உடற்கூறு, மனவோர்மை இவைகளின் தன்மையறிந்து செயல்படுவோமானால் நீண்ட நாள் வாழும் தன்மையுடைய மனித சிலைகளை வடிக்கமுடியும் என்பதை இங்கே விவரிப்போம்.

உள்ளத்தின் ஏற்றத்தாழ்வே வாழ்க்கையில் தம்பதிகளிடையே மேடுபள்ளத்தை உண்டாக்குகிறது. மனம் நிறைவு பெற்ற குடும்பமே என்றும் அமைதியாக வாழ்கிறது. ‘போரிட்டமனை ஆரிட்டுப்போகும்’ என்பது பழமொழி கூச்சலும் குழப்பமும் உள்ள சூழ்நிலையாக என்றும் அமைந்துள்ள குடும்பம் அது விரைவிலே அடக்கப்பட்டோ தன்னால் அழிந்தோ போகிறது. அத்தகைய சூழ்நிலையில் உற்பத்தி

யாகும் மனித இனம் மாறுபட்ட கருத்தோடு மனித சுபாவத்திற்கே மறுப்புக்கூறும் வகையில் வளர்கிறது.

மணவாழ்க்கையில் உடல் நிலையை அனுசரித்து இன்பம் அனுபவிக்கும் தம்பதிகள் கூட்டுறவு நேரத்தில் உள்ளத்தில் இருவர் மனோநிலையும் எந்த லட்சியத்தை நினைக்கின்றன என்பதை மிக கவனமாகக் கருத்தில் வைக்க வேண்டும். காமத்தின் வேட்கை மிகுந்த ஆண்களோ பெண்களோ சிற்றின்பத்தின் உணர்ச்சிப் பெருக்கை மட்டுமே எண்ணி எண்ணி இன்பத்தில் மிதக்கும் நிலையிலும், ஆண்களால் கட்டாயப் படுத்தப்பட்ட உடல் உறவில் வெகுண்டு வினை முடிப்பதிலும் மற்றொரு நங்கையின் எண்ணத்தை மனதில் ஊன்றி சடமாக இருக்கும் ஆண்களும் பெண்களும் இப்படி பல நினைவுகளுடன் சிற்றின்ப சேர்க்கையில் ஈடுபடுகின்றோம். அதன் தரத்திற்கேற்ற பலன்களே குழந்தை உருவிலே கிடைக்கிறது.

“ சென்னியில் வைத்தே திருநந்தி தாளிணை
மன்னிய காயம் வந்தவகை தன்னைக்
கன்னி வகுத்த கருப்பத் திருமந்திரம்
உன்னியுரைத்தே னுயர் வாமறுநூறே.” —திருமூலர்

எண்ணத்தின் அலை கருவில் ஒலிக்கிறது

ஆண்களும் பெண்களும் சேர்ந்து கூட்டுறவாக அமைக்கும் மனிதயினம் பெண்ணின் கருப்பையில் வளர்க்கப்படுகிறது. ஆனல் ஒரு கோழி தனது முட்டையை எத்தனை நாட்களாயினும் அடைகாக்கிறது. குஞ்சு பொரித்தால்தான் கூண்டைவிட்டு வெளியேறுகிறது இதற்கிடையில் அதனை எத்தனை தடவை வெளியே எடுத்து விட்டாலும் திரும்பத் திரும்ப தன் முட்டைமீதே வந்து உட்காருகிறது. முட்டை மீது உட்கார்ந்து என்ன செய்கிறது? எண்ணம் என்ற தீ உடலினின்று வெளிப்பட உருக்களை உண்டாக்குகிறது. மனிதன் உள்ளத்தாலும் உடலாலும் பக்குவப் படுத்தப் பட்டு கருவாகி தெளிவான வளர்ச்சிக்குரிய கருப்பொருளே எதிர்பார்த்து வளர்ந்து கொண்டிருக்கும் கருவிற்கு நாம் மனத்தாலும் உடலாலும் செய்ய வேண்டிய கடமைகளுள் மனத்தால் செய்ய வேண்டிய கடமையே முக்கியமானது. உருக்களுக்கு வேண்டிய திரவங்கள் யாவும் ஒழுங்கான முறையில் கருப்பையில் செலுத்தப்பட்டு விட்டன.

"உடலுற்ற வாறும் உயிருற்ற வாறும்
மடைவுற்ற ஒன்பது வாசலின் வாறும்
திடமுற்ற தத்துவஞ் சீவன் புலன்களும்
கடலுற்ற நீர்போற் கண்ட கருவிதே." —திருமூலர்.

ஆனல் அப்படி ஒழுங்காய் அடிப்படை அமைத்தான பின்பு வளரவேண்டும். கண்ணெதிரில் வளரும் செடிக்கு நீர் பாய்ச்சி புழுபூச்சிகளால் எவ்வித இடுக்கண் வராமல் கண்ணில் விளக்கெண்ணெய் கட்டி பாதுகாக்கும், செடிகள்கூட அழுகிவிடுகிறது. என்ருல் கண்ணுக்குத் தெரியாத மனத்தால் நிதானிக்க முடியாத நேரில் உதவி செய்ய முடியாத மனித செடிக்கு எண்ணத்தால் மானசீக தொலைபேசியால் உடலின் குருதியால் காலம் நேரம் அறிந்து அனுப்பும் வளர்ப்பு நிதி எத்தனை பரிசோதனைக்குப் பின் அனுப்ப வேண்டும் என்பதனை கவனிக்க வேண்டுமல்லவா?

அவனவன் விதி என்ற அமைப்பை தந்தையும் தாயும் மனிதனை உள்ளத்தால் வடிக்கும்போதே குணமும் செயலும் ஆயுளும் சேர்த்தே வடிக்கிருர்கள் என்பதை திருமூலர் சொல்லிலிருந்து அறியலாமல்லவா?

எண்ணத்தின் முடிவே உருவின் அமைப்பு

"விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதலைந்து உயிரோடு மேறித்
தெழிந்தது அப்புத்தேற்றுங் குணமும்
பொழிந்து புகுந்தது புணர்கின்ற போதே."

என்ற அடிகளினின்று ஆண் பெண் கூட்டுறவு எவ்வளவு பெரிய தெய்வீக சக்தி வாய்ந்த மகத்தான செயல் என்பதை மறுக்க முடியாதல்லவா. இந்த மகத்தான பணியைச் செய்யும் ஆணும் பெண்ணும் அறிவு பண்பு ஆராயும் திறன் இவைகளில் தேர்ச்சி பெற்று ஒரு மருத்துவர்க்குரிய பல உடற்கலையும் தெரிந்த கலைஞர்களே மனிதயினங்களை உண்டாக்கி வளர்க்கும் விஞ்ஞானிகளைப் போன்றவர்கள். தந்தையும் தாயுமாக இருந்தால் நூருண்டென்ன இருநூருண்டுகள் கூடவாழ முடியுமல்லவா! இதற்கு எதிர்மாருக உள்ள தாயும் தந்தையுந்தான் நம்மையெல்லாம் படைத்துப் பரிதவிக்கின்றனர். ஒரு தமிழனின் சராசரி வயது 22 தான் என கணித்துள்ளனர்.

நமது பிறவியில் நம்மை வளர்க்கும் உணவு கருப் பொருளைவிட உள்ளத்தின் உயிர்காற்று நல்ல மலர் குலுங் கும் நறுமணம் வீசும் கண்ணுக்கும் காதுக்கும் உள்ளத்திற் கும் ஆண்மைக்கும் உறைவிடமான மனமென்ற மலர் பூங்கா வின் வழியாகக் கருப்பைக்கு வரும் நினைப்பென்னும் உயிர் காற்றுத்தான் ஆயுளை வளர்க்கும் அமிர்தமாக இருக்கும் பயம், திகில், குரோதம், காமம், தீய நினைப்பென்ற சாக்கடை சக்தியிலே கொடிய மிருகங்கள் வசிக்கும் துர்நாற்றமடிக்கும் சேறும் சகதியும் நிறைந்து இருண்ட கானகத்தின் வழியே வரும் நினைவென்னும் உயிர் காற்றுத்தான் ஆயுளையும் அறி வையும் குறைத்து மக்களினத்திலிருந்து மாக்களினத்தில் பிரித்து வைக்கிறது. என்பதையும் கோழையாகவே வாழ் வதோடு அவனே அவளோ ஒரு நாளைக்கு பலதரம் இறந்து பிழைக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது வெடி குண்டைவிட எண்ணம் விரைவில் கொல்லும் என்பதற்கு உதாரணமாக இதை எழுதிக்கொண்டிருக்கும்போது நடந்த நிகழ்ச்சியை இங்கே எழுதுகிறோம்.

சென்னை தங்கசாலைத் தெருவிலே ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர் மனைவி நலமாகத்தான் இருந்தார்கள். நேற்றுக்கூட கடைக்கு வந்து போனதை நானும் பார்த் தேன். உடலுக்கு ஒன்றுமில்லை. ஆனால் மிக நோஞ்சை யான உடல்தான். சாஸ்திர சம்பிரதாயமான மூடப்பழக்க வழக்கங்களை உடையவர்கள் என்று தெரிகிறது. இன்று இரவு 9 மணிக்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் தலையில் பல்லி விழுந்தது. ஏற்கனவே பல்லி விழும்பலன் என்ன என்பதை தெரிந்து வைத்திருப்பார்கள் என நினைக்கின்றேன். ஐயோ! தலையில் பல்லி விழுந்து விட்டதே என்று கூறி மூர்ச்சையானதோடு இரண்டொரு மணி நேரத்தில் ஆவி பிரிந்து விட்டது. இதைப்பற்றி டாக் டர் (அபிப்பிராயம்) பயந்து திகில் அடைந்ததால் இருதயத் துடிப்பு நின்று விட்டது என்று கூறுகிறார். எண்ணத்தின் சக்தியை இன்னதென அறிந்து கொண்ட பின் வாழ்வது தானே முடியாது. (வளரும்)

★

அழகிற்கு அடிப்படை முடிதிருத்தும் கலை

எம். ஏ. ஆர்.

★

மருத்துவக்கலை, முடிதிருத்தும்கலை, இசைக்கலை, இம் மூன்றும் ஒரு சமூகம் தங்கள் பரம்பரைத்தொழிலாகக் கொண்டுள்ளதால்; இடித்துக்கூறும் முடிதிருத்துங்கலையை சமயா சந்தர்பங்களில்தவிர மற்றநேரங்களில் மருத்துவக்கலையிலும் இசைக் கலையிலும் ஆர்வம் செலுத்தினர். ஒருசிலர் மருத்துவக் கலை தவிர வேறெதையும் தொடாதவர்கள். பெரும்பாலோர் இசைக் கலையில் பாண்டித்யம் பெற்றவர்கள் முடிதிருத்தும் கலையைத் தொடாமலும் உள்ளனர். பலநூற்றாண்டுகளாக—புதிய கருவிகள் தோன்றுமுன் இக்கலை வளர்ச்சியடையாதபோது இதில் பெரும்பாலும் கவனம் செலுத்தாதவர்கள்—இந்த இருபதாம் நூற்றாண்டில் நாடு, நகரம், பட்டி, தொட்டிகளில் புதிய கருவிகள் (மிஷின் போன்ற இதரகருவிகள்) வந்த பின்பே இக்கலையைப் பின்பற்ற இச்சமூகத்தினர் முனைந்தனர் பலமுனைகளில் நாகரிகமான சலூன்கள் தோன்றிய பின்பு வெளிநாடுகளுக்குச் சென்று இக்கலையைப் பிறர் உணருமாறு திறமையாக செய்யும் ஆற்றல் வாய்ந்த தமிழகத்து முடித்திருத்தும் கலையை அறிந்தவர்கள் நம்நாட்டு மக்களின் இகழ்ச்சிக்கு செவி சாய்க்கவில்லை. இலாப நட்டங்கள் பாராத இத்தொழில் செய்வோர் ஓரளவுவாழ்ந்தால் போதும் என்ற மனப்பான்மையில் வளர்ந்துவிட்டனர். ஆனல் இக்கலைக்கு உயரிய இடம் கொடுக்க செய்பவரும் செய்து கொள்பவரும் பொதுமக்களும் முன்வராத காரணத்தாலே இக்கலை மெருகிடப்படாத தங்கமாக இருக்கிறது.

மனித சமூகத்திற்கும் இயற்கையாக வளர்ந்துள்ள தாவர வர்க்கங்களுக்கும் இயற்கையழகு இருப்பினும் அவை கண்ணுக்குக் கவற்சியளிக்கும் வகையில் சோதித்து செப்பனிட்டாலன்றி இனிய தோற்றமளிப்பதில்லை. பலநாட்கள் பூமியைக்குடைந்து எடுக்கும் வைரங்கள் இயற்கையில் தனியொளி வீசினலும் சாணைபிடித்து பட்டையடித்தாலன்றி அழகு தருவதில்லை. பத்தரை மாற்றுத்தங்கம் அலங்காரமாலைகளாக மாற்றியபோதுதான் அழகு தருகிறது. அடர்ந்து இருண்டு பசுமை பொருந்திய காடுகள், மரங்கள், செடிகள், இவையெல்லாம் கூட வரிசைப்படி பலகோணங்களில் வெட்டி வரிசைப் படுத்தினலன்றி அழகு தருவதில்லை. அப்படியே பூமண்டலத்தி லுள்ள ஒவ்வொரு பொருளும் மனிதன் மனதிலே தோன்றுங்

கலைவடிவங்களைச் செய்கையில் வடித்தெடுத்துப் பார்ப்பதே கலையின் மெருகும் காண்பதில் கவர்ச்சியும் உடையதாயிருக்கிறது. மனிதன் இயற்கையில் தோன்றியதன் அவயங்களுக்கு செயற்கையாக ஆடையணிகளைப் பொருத்தி இயற்கையாக வளர்ந்த முடிகளை உருவத்திற்கேற்ப திருத்தியமைக்காவிடில் களைசொட்டும்முகத்தைக் காணமுடியாது. கரடுமுரடான கல்லை சிற்பியின் மானசீக அறிவு ஒரு சிறிய உளியைக்கொண்டு மனக்கண்ணாடியில் தோன்றிய உருவை வடிக்கிறான். ஓவியன் தனது எழுதுகோலின் துணைக்கொண்டு அற்புதமான பொற்சிலைகளைப்போன்ற வடிவழகிகளையும் இயற்கைத் தோற்றங்களையும் வடித்தெடுக்கிறான். ஆனால் செதுக்கும் சிற்பியோ எழுதும் ஓவியரோ குறிப்பிட்ட சிற்பத்திலோ ஓவியத்திலோ ஏற்படும் தவறைத் திருத்திவிடலாம். ஆனால் முடித்திருத்தும் கலைஞன் குறைந்ததைக் கூட்டவோ உயர்ந்ததைத் தாழ்த்தவோ முடியாது.

கவனக்குறைவாகத் தொழிலில் ஈடுபட்டால் கலையழகுக்கு பதில் கண்ராவி அழகைத்தான் பார்க்கலாம். முடிதிருத்தும் ஒவ்வொரு கலைஞனும் உள்ளத்திலே அழகு செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையோடு செய்தால் கலையழகும் முகக்களையழகும் மிளிரும். இல்லையேல் அழகான முகமும் அருவருப்பான கோணத்தில் மாறிவிடும்.

இதனை நாம் இன்றும் காணலாம். நல்ல அழகான முகம் ஆஜானுபாகுவான உடல் அழகிய தலைமுடியுடன் உள்ள ஒருவனுக்கு தலைமுடியை பனங்காய் மாதிரி அல்லது மாங்காய் அளவில் முடியை வெட்டிப் பாருங்கள் அத்தனை இயற்கையழகிற்கும் கரும்புள்ளியாகத் தோன்றி ஆளையே மாற்றிவிடும். மனிதனின் முகத்தின் அழகை முடியைக் கொண்டு அவலட்சணமாக்கவும் அரூபியாக்கவும் முடியும். அழகுக்கு அழகு செய்யும் அருங்கலையை தமிழ்நாடு அறியாமையால் தாழ்வாக நினைக்கும் மனப்பான்மையில் வளர்ந்து விட்டதற்கு அறிவுடையோர் வருந்தாமல இருக்கமுடியாது. இந்த கலையழகு இன்று நேற்று தோன்றியதல்ல என்பதற்கு சில உதாரணங்கள் சொல்லாம்.

பாரத யுகத்துக்கு வாருங்கள் அஸ்தினபுரத்தில் திருதராஷ்டிர மகாராஜன் அரசோச்சும் நாட்களிலே அவன் தம்பிப் புதல்வர்களுக்குள் பங்காளி காய்ச்சலில் ஏற்பட்டப் பகைமையை நாம் படிக்கிறோம். அடுத்து அதனல் ஏற்பட்ட பிரிவினையின் காரணமாக பாஞ்சால தேசத்து துருபதன் செல்வக்குமாரி பாஞ்சாலியைப் பாண்டவர்கள்

மணமுடித்த பின் ஏற்கனவே காண்டாவனத் தகனத்தில் அருச்சுனனால் காப்பாற்றப்பட்ட மயன் என்னும் கட்டடக் கலைஞனின் திறமையினால் கட்டப்பட்ட இந்திரபிரஸ்த்தத்தில் நடந்த இராஜசூய யாகத்திற்குப்பின் நடைப்பெற்ற பட்டம் சூட்டும் விழாவிற்கு வந்துள்ள 56 தேசத்து அரசர்களின் தோற்றங்களை வருணித்து வியாசர்; அவர்கள் உடையலங் காரம், உடலமைப்பு இவைகளைவிட அவர் மனதைக் கவர்ந்த முடியலங்காரங்களில் மனதைப் பறிகொடுத்த வியாசர் 10 பாக்களில் அவர்கள் விதவிதமாக முடிகளை அழகு படுத்தி முடியலங்கார காட்சி விழாவாக தோன்றியதாக கூறுகிறார். உடலைப் பொன்னாலும் பட்டாலும் பலவற்றாலும் அலங்கரித்தாலும் முகத்தையும் தலையையும் முடியின்றி அலங்கரிப்பது பொம்மையைத் தவிர மனிதனையல்ல.

அழகான ஒருமனிதனை வர்ணிக்கும் போது அவனது அரும்பு மீசை வாலிபத்தின் வனப்பை உயர்த்திக் காட்டிற் றென்றும் அவனது சுருண்டமுடி நெற்றியில் படிந்து மாதர் மனத்தைக் கவர்ந்தது என்றும் எழுதாத எழுத்தாளர் உண்டா? இராமாயணத்திலே ரகுராமனுக்கு முகத்தையும் முடியையும் அலங்கரிக்கும் சுமந்திரன் திறமையைப் பற்றி புகழ்ந்து எழுதப்பட்டிருக்கிறது. மாதர்களின் கொண்டை யழகைப்பற்றி எடுத்துக் கொள்வோம். அஜந்தா வருணக் குகைக்கு வாருங்கள் அங்கே ஒவ்வொரு அரச குடும்பத்து இராணிகள் முதல் சாதாரணப் பெண்கள் வரை அவர்கள் முடிகளைப் பகிர்ந்து விதவிதமாக அலங்கரித்து மனதைக் கவரும் வகையிலே அமைத்துள்ள கொண்டை யழகு ஆட வரை மயங்கவைக்கிறதல்லவா? உச்சிமுதல் உள்ளங்கால்வரை அலங்காரங்களை அமைத்து கண்ணைத் திறந்து வைக்காவிடில் அத்தனை அழகும் எப்படிப் பாழாகுமோ அப்படியே எல்லா அங்கங்களையும் அலங்கரித்து முகத்தையும் தலை முடியையும் அலங்கரிக்காத உருவம் அழகு உருவமாகத்திகழாது என் பதை மறுக்க முடியாது. தமிழகத்திலே மக்கள்வாழ மலத் தையும் குப்பையையும் நீக்கி மனையை சுத்தம் செய்பவனும் காடுகரம்புகளை அழித்து பண்டுத்தி நிலமாக்கி மக்கள் உயிர்க் காக்க உணவுப்பொருளைப் படைத்தவனும் மக்கள் நாகரிகத் திற்காக மண்டிக் கிடக்கும் முடிகளை நீக்கி அழகுபடுத்தி மனி தனுக்கும் கலைஞர்களையும் அழுக்கும் கிருமியும் பரவாமல் ஆடைகளை சலவை செய்யும் சலவை யாளரையும் இந்நாடு மிக ஒதுக்கப்பட்டவனாகக் கருதி வருவது அறியாமையாலா? மந்த புத்தியினாலா? என்பது வேதனைக்குரியது. (தொடரும்)

வாழவேண்டுமானல்...?

M. ராஜகோபால்

உலகம் துன்பமயமானது; வேற்றுமைகள் நிறைந்தது. ஏழை, பணக்காரன்; முதலாளி, தொழிலாளி; அடிமை, ஆண்டான்; அறிந்தவன், அறியாதவன்; இன்னும் எத்தனை எத்தனையோ! கடவுள்தான் இவற்றிற்கெல்லாம் காரணம் என்பர். புலியையும் படைத்தார்; மானையும் படைத்தார்! கருணையுடையவரா அவர்? ஞானக்கண் முன்னல் நன்மை, தீமை வேருமோ? மக்களில் உயர்வு தாழ்வு ஏன்? இப்படியெல்லாம் சிந்தித்தார் உமார்க்கையாம், சிந்தித்து சிந்தித்துச் சிந்தை நைந்தார். அவருடைய மனம் அமைதி பெறவில்லை. நன்ருக வாழ்பவர்கள் ஒரு சிலரே; கஞ்சியின்றி கதறுபவர்கள் மிகப்பலர். இந்த நிலை ஏன்? இதை யொழிக்க என்ன செய்ய வேண்டும்? நினைக்க நினைக்க துயர் தான் மிகுதி.

துன்பத்தை மறப்பதெப்படி? ஆம், மயக்கத்தில் ஆழ்ந்தால்தான் துன்பத்தை மறக்க முடியும்.

செல்வி திராட்சை வல்லிதரும்
தெய்வமகளை மணந்து கொண்டேன்.
இல்லை, துயரம் இல்லையினி
இன்பம் என்றும் இன்பமதே.

இனித்துயரில்லை. விவேகத்தால் அடைந்த கவலைகளவில்லை. தொல்லை நீங்க மது உண்டால் உலகைப்பற்றி சிந்தப்பதேது? இப்படி உமார் உலகத்தை மறக்க வழி கூறுகிருர்! சொர்க்கம் சொர்க்கமென்று ஏங்குகிருர்களே அவர்கள் இரங்கத் தக்கவர்கள். கிட்டாததைப் பற்றி எண்ணுவதால் என்ன பயன்? எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுவதைத் தவிர கண்டபயனென்ன? நம்மைப் பொருளை நம்பியே இருப்போம். சொர்க்கம் இங்கே உள்ளது. அதோ தெரிகிறதே....வெய்யிற்கேற்ற நிழல்; வீசும் தென்றல்; கையிலே கம்பன் கவி; கலசம் நிறைய மது; தெய்வகீதம்; அதைப்பாட மங்கை, இத்தனையும் நடைபெறும் இடமாக வனம். இதைத்தவிர சொர்க்கம் ஏது? மனிதன் மிகுந்த

நேரத்தில் பைத்தியமாகவும் மாறுவதுண்டு. அந்தநேரத்தில் அவனுடைய போக்கே விசித்திரமானது. இதைத்தான் உமார் இவ்வாறு கூறுகிறார். மயக்கத்தினால் துயரை மறந்து விட முடியாது; அப்படி மறந்திருந்தாலும் சிறிது நேரம்தான் அவ்வாறு இருக்க முடியும் என்பதையும் உமார் மறக்கவில்லை. மக்கள் துயர் போக்க இப்படியெல்லாம் இருந்தால் பயனில்லை அவர்களிடம் அன்பு கொள்ள வேண்டும். அன்பு அயலாரையும் உறவினராக்கும். அன்பு நீங்கின் உறவினரும் அயலாராவார் என்ற உண்மையை நமக்கு அறிவுறுத்துகிறார்.

உமார் பிறர் குறையைக் காண்பதிலேயே காலத்தைக் கடத்துபவர் அல்லர். தம் குறையையே இரவு பகலாக ஆராய்பவர். அப்படி ஆராய்ந்து ஆராய்ந்து இவ்வுலகக் கொடுமை தான் அவருடைய இதயத்தைப்பிளந்தது. ஆகையால் இப்படி வாழ்வதிலும் ஓடி ஒழிவது நலம் என்கிறார். எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்வேன்? என்ற கேள்விகளுக்கு விடைகாண முயன்றார். அதுவும் தெளிவாகவில்லை. ஆகவே மறுபடியும் விரக்திதான் வண்ணக்கிளியே மதுவை ஊற்றித்தா என மறுபடியும் கேட்கிறார். மக்கள் வேற்றுமையால்தான் துன்பமுறுகிறார்கள் எனக் கண்டார். இன்று சாதி சமய வேறுபாடுகள் இல்லாதிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? மக்களிடையே உயர்வு தாழ்வுகள் இன்று எல்லோரும் ஓர் குலம் ஓர் இனம் என்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். அந்நாள் என்று வருமோ?

> "சாதி இல்லை மதமில்லை
> தரணிமீதோர் ஆசையில்லை
> யாதும் கவலையில்லை; எனக்கு
> யாரோ நிகராம் இவ்வுலகில்?"

இவ்வாறு யார் நிகரற்றவர் என்பதை விளக்குகிறார், உண்மையான அன்பின்றி உள்ளத்தில் கனிவின்றி, வாழும் மக்களைப் பார்த்து இரங்குகிறார் உமார்.

> "ஆலயங்கள் ஏனய்யா;
> அபிடேகங்கள் ஏனய்யா!
> கோலங் கோடிகள் ஏனய்யா!
> கொட்டு முழக்கம் ஏனய்யா!
> பாலும் பழமும் வைத்து நிதம்!
> பணிந்து நிற்பதேனய்யா!
> சீலம் பேணும் உள்ளத்தைத்
> தெய்வம் தேடி வாராதோ!

இன்னும் மனிதன் சுகம்பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? இல்லாத பொருளுக்கேங்காமல், இருக்கும் பொருளுக்கெண்ணாமல், எல்லாம்வல்ல இறைவன், அளிக்கும் படி வாங்கி, நல்லார், அறிஞர் நட்பை நாடி வாழ்ந்தால் நில்லா உலகில் நிலைத்த சுகம் பெறலாம் என்கிறார் உமார், ஒருவர் மட்டுமே சுகம் பெறுவதை உமார் விரும்பவில்லை. இந்த உலகிலுள்ள அனைவரும் சுகம் பெறவேண்டுமென்கிறார். அப்பொழுதுதான் மக்களிடையே அமைதி நிலவும். இப்பொழுது காணப்படும் போரும் பிணக்குப் அப்பொழுது இருக்காதல்லவா? சுகம் பெற்றால் போதுமா? வாழவேண்டாமா?.... என்றென்றும் வாழவேண்டாமா? அதற்கு என்ன செய்வது?

"ஆழி சூழும் உலகாளும்
அரசனாக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும்நீ
மறந்துவாழ வேண்டுமடா!
ஏழையாகிய எளியவரின்
எளிய னாகவேண்டுமடா!
தோழனாகி யாவர்க்கும்
தொண்டனாக வேண்டுமடா!

இத்தகைய வாழ்க்கைத்தான் மனிதனை மனிதனாக்குவது

கவுந்தபாடி மருத்துவர் சங்கம் பொதுக் கூட்டம்

27-10-61-ல் திரு. K. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பவானி G. அர்த்தனாரி, எஸ். வி. கிருஷ்ணசாமி ஆகியோர் சங்க வளர்ச்சியைப்பற்றிப் பேசினார்கள் விரைவில் ஆண்டு விழா நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு க. பழனிசாமி செயலாளராகவும் E. K. R, மாரிமுத்து துணைச்செயலாளராகவும் நியமனம் செய்யப்பட்டு தலைவர் கிருஷ்ணன் அவர்கள் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

★

ஆசிரியருக்குக் கடிதம்

ஆசிரியர் அவர்களுக்கு சேலம் ஜில்லாவில் கொடுத்த சலுகை மற்ற ஜில்லாவில் ஏன் கொடுக்கப்படவில்லை. இதற்கு யார் காரணம் மத்திய சங்கம் இதைக் கேட்க வேண்டும் மேலும் நமது சார்பாக சட்ட சபையில் இருக்கும் V. இரங்கசாமி M. L. C. அவர்கள் கேட்க வேண்டும் மன்ற ஆசிரியர் அவர்கள் இதில் கலந்து முடிவுசெய்ய வேண்டும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நமக்கும் சலுகை கிடைக்க வழி செய்யவேண்டும்.

செயலாளர்

மதுராந்தகம் மருத்துவர் சங்கம்.

மருத்துவர்களே நீங்கள் சிந்திப்பதுண்டா?

(எம். ஏ. ஆர்)

நாட்டிலே நல்லதும் கெட்டதும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. மேடு பள்ளமாகிறது, பள்ளம் மேடாகிறது. காடும் மலையும் கழனிகளாயின. கூரைவீடும் குப்பைமேடும் கோபுரமாயின. பாலைவனம் பசும்புல்தரையாயிற்று. கட்டுக்கடங்காமல் ஓடிக்கொண்டிருந்த காட்டாறுகளைக் கட்டுப்படுத்தியாயிற்று. வறண்டபூமியிலே 'வரமாட்டேன்' என்று பதுங்கிக் கிடந்த நீரையெல்லாம்'விட்டால்போதும்'என்று வெளியேற்றியாயிற்று. அதள,சுதள,பாதாளலோகம் என்பார்களே, அந்த லோகத்தையும் தோண்டி, அங்கிருந்த நீரையும் கனியையும் கொண்டுவந்தாகி விட்டன. அலைபுரண்டு ஆர்ப்பரித்து 'ஆழ்த்தி விடுவேன்' என்று மிரட்டிவந்த கங்கைக்கும் கரைகட்டியாகி விட்டது. கட்டுப் படுத்த முடியாத காற்றையும் ஒரே இடத்தில் கட்டுப்படுத்தி (ஏர்கண்டிஷன்) ஆயிற்று. வானத்திலே உலவும் வெண்மதிக்குப் போக வழிகண்டாயிற்று. வராத மழையை வருவிக்கவும், வேண்டாத மழையை நிறுத்தவுமாயிற்று. அணுவிலே பல ஆச்சரியங்களைக் கண்டாயிற்று. பூமி ..ருளைடை வடிவமாகச் சுற்றிவருவதையும் பார்த்தாயிற்று. கடல் நீரை நன்னீராக்கவும் ஆயிற்று. இமயத்தின் எல்லையையும்பார்த்தாயிற்று. வனத்திலுள்ள மனிதக்குரங்கைப்பிடித்து, நடிக்கவும் செய்தாயிற்று. துஷ்டமிருகங்களை அடக்கிச்சொன்னதைச் செய்யவும் ஆயிற்று. மனிதஉருவிலே பகுத்தறிவின்றி வாழ்ந்த பழங்குடிமக்களை, நாட்டிலே வாழ வழி வகுத்தாயிற்று. ஏர்பிடித்தவன் செங்கோல்பிடிக்கிறான். பஞ்சாங்கம் படித்தவன் படைத்தலைவனானான். ஊரைமேய்ந்தவன் உல்லாச புரிக்கு அதிபனானான். 'மழைபெய்வதும் குழந்தை பெறுவதும் மகாதேவனுக்குத்தான் தெரியும்' என்றபழமொழிக்குச் சமாதி கட்டியாயிற்று. பஞ்சப் பாட்டுப் பாடிப் பவனிவந்தவர்கள் மஞ்சத்திலேறிக், கொஞ்சிக் களிக்கிறார்கள். ஒரு பைசா பிச்சை கேட்டவன் 2 பைசா கேட்கிறான்.

அணா பைசா மறைந்து நயாபைசாவாக மாறியது. ரூபாய்க்கு 4படி விற்ற அரிசி படி 1—4—0 ரூபாய் ஆயிற்று. ஒன்றுக்குப் பத்தாக விலை உயர்ந்தது. மன்னர் ஆட்சி, மக்கள் ஆட்சி ஆயிற்று. தென்குமரி வடவேங்கடம் திருத்தணி ஆயிற்று. பொட்டல்காடு பொன்விளையும் வயலாயிற்று. இருண்டுகிடந்த கிராமங்கள் ஒளிபெற்றன. நலிந்துகிடந்த நக

ரங்கள் நல்லதொரு தொழில் பேட்டை ஆயின. கேடி, கோட்டீஸ்வரனானன். கிழவன் காளையானான். பெண் ஆணாக மாறினாள். ஆண் பெண்ணாக மாறினான். அடிமையில் ஊறிய நீக்ரோக்கள், ஆட்சிபுரிகிறார்கள். கொடுத்ததை வாங்கிக் கிடைத்ததை உண்டு குடித்தனம். பண்ணிய பட்டிதொட்டி பாட்டாளி மக்கள் சர்க்காரை (அரசை) எதிர்த்துப் பவனிவந்து பலனை அடைந்தார்கள்.

கண்டம்விட்டுக் கண்டம் கணைகள் சுயேச்சையாகப் பறந்து செல்கின்றன. பணத்திலே படுத்துப் பறக்கவிழித்து உறக்கமில்லாதவனைப்பாயிலேகிடத்தி, உறங்கவைத்தாயிற்று. காட்டிலிருந்த காண்டாமிருகத்திற்குக் கடிவாளம் போட்டு வீட்டுக்கு வந்துவிட்டது. அழுதபிள்ளைக்கு வாழைப்பழத்தைக் காட்டி ஏமாற்றாமல் பாலைக்கொடுத்துப்பாராட்டியாயிற்று. கீரியும் பாம்பும் சேர்ந்து நடித்து மனிதனைப் பழிக்கிறது. புல் உணவாகிறது. கள்ளும் வெல்லமாகிறது. நஞ்சும் உயிரைக் காக்கிறது. கஞ்சனும் கர்ணனாகிவிட்டான். ஏமாளி எத்தனாகி விட்டான். கறக்காத மாடு கறந்து விட்டது. அடியாமலே மாடு பணிந்துவிட்டது. பேசாத ஊமை படிக்கிறான். எழுத்தையே அறியாத குருடன் படித்துப் பட்டம் பெறுகிறான். எத்தனையோ அற்புதங்கள்! எண்ணிலடங்காத மாறுதலைக் காண்கிறோம்.

'மனிதன் மாறிவிட்டான்' என்ற பாட்டையும் கேட்கிறோம். ஆனால் நீங்கள் அறியாமை, வறுமை, பிறருக்கு அடிமையிலிருந்து மாறியதுண்டா? மருத்துவர்களே! சிந்துத்துப் பாருங்கள்! கிராமத்துக்கு வாருங்கள். அங்குநமக்குச் சுதந்தரமுண்டா? வயிறார உண்ணுவதற்கு வருவாய் உண்டா? குறைந்த கூலியில் ஏற்றமுண்டா? கூட்டிக் கேட்க உரிமை உண்டா? உண்பதற்கே பற்றாக்குறை என்றால் உடுக்கும் கந்தை, மானம் மறைக்கப்படுவது தவிர, மாற்றுக்கு உடை இருக்குமா? தனக்கே தகராறு என்றால் தானிருக்கும் குடிசைக்குத் தட்டோடு இருக்குமா? கட்டிய கணவனே கதியற்றுக் கலங்குகிறான் என்றால், காதல் மனைவிக்குக் கால்வயிறு நிறையுமா? கலியாணத்திற்கு வாங்கிய கடனுக்கு வட்டி கொடுக்க முடியாத தொழிலாளி எத்தனை பேர்? காலத்தையும் கடவுளையும் சபித்து வாழ்பவர் எத்தனைபேர்? பற்றாக்குறையால் பட்டினி கிடந்தாலும் பாழாய்ப்போன உடலுணர்ச்சி செத்தாபோகும்? ஆசை வெட்கமறியுமா? காதலுக்குக் கரை எழுப்ப முடியுமா? பசியாலும் பட்டினியாலும் உலர்ந்தும் உலராமலும்

இருந்தாலும், 'மேகத்தைக் கண்ட மயிலை'ப்போல இன்பக்கரு விகள் இளைத்து விடுமா? கைகண்ட பலன் தானே! ஆண்டு தோறும் எண்ணிக்கை பெருகுகிறது. ஒன்றுக்கும் இரண்டுக்கும் ஓடாய்த் தேய்ந்தவர்கள் ஐந்துக்கும் ஏழுக்கும் ஆலாய்ப் பறக்க வேண்டியதுதானே? இது யார்மீது குற்றம், உழைத்து உருமாறி, உலுத்துப்போன உடலுக்கு உறக்கம் மட்டும் போதுமா? உறங்கிவிட்டாலும் உடற்பசி இருவருள் ஒருவருக்கு என்றைக்காவது ஒருநாள் விழித்துக் கொள்ளாதா? பொருளாதாரத் துறையிலே சுருக்கமும், பிள்ளைகள் பெறுவதிலே பெருக்கமும், அதைப் பராமரிக்கவோ பள்ளியில் வைக்கவோ முடியாது உள்ளம்நொந்து, சாகாமல்செத்துக்கொண்டிருப்பவர்கள் எத்தனைபேர்? அது மட்டுமா? குறைந்த கூலியும் நிறைந்த வேலையும் வாங்கும் கிராம உயர் சாதி மக்கள் செய்யும் அதிகாரம் தளர்ந்ததா? வருடத்தில் கொடுக்கும் ஆறுமரக்கால் நெல்லுக்குக் குறைந்த பட்சம் ஐந்தாறு உறுப்பினர்களுக்கு வாரந்தோறும் கூப்பிட்ட நேரத்திலே வீட்டைக் காத்துக்கிடக்கத் தவறினால் வேதனை செய்கிறான் என்பதை மறுக்க முடியுமா? கிராமத்திலே நடை பெற்றுவந்த பழைய வழக்கங்கள் இன்னும் நடை பெற்று வருகின்றன என்பதை மறுக்க முடியுமா? மனிதத்தன்மையற்ற முறையில் தனி வீட்டுக்காரன் என்ற அலட்சியத்தில், உதையும் குத்தும், சமயத்தில் வெளியேற்றவும், எங்கோ ஓரிடத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் சர்க்காரால் வழங்கப்பட்ட தொழில் மானியத்திலும் பிரவேசித்து, அதைத் தாங்களே சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறார்களே! அதை யார் கேட்பது? இன்னும் கிராமத்திலே மாடுமேய்க்கும் சிறுவன் உயர் சாதியாய் இருந்தால் நம்மவர் ஐம்பது வயதுக்கு மேற்பட்டபெரியவராய் இருப்பினும் 'டேய்' என்றே, பெயரைச் சொல்லியோ கூப்பிடுவதோடு, பொதுவான கிராம 'டீ' கடைகளில் நம்மவர்கள் உட்கார்ந்திருந்தால் மனிதத் தன்மை அற்ற முறையில் திட்டவும் அடிக்கவும் ஆரம்பிக்கும் சாதிக் கர்வம் பிடித்தவர்களை நாம் என்னசெய்தோம்?

நம்மையாளும் அரசாங்கத்திற்குக் கூடப் பயப்படாமலும் சட்டத்தை மீறாமலும் வாழ்கிறோம். ஆனால் கிராமத்திலே சாதி வெறியர்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் பயந்தே வாழ்கிறார்களே, அதற்கு என்னவழி? பொதுவாக நமக்குச் சொந்தமான இடங்களில் நமது இஷ்டப்படி நடக்க முடியாது; அவர்கள் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடந்தாலன்றிக் கிராமத்திலே வாழ முடியாது என்ற நிலையிலுள்ள அந் நகர வேதனைக்கு விடுதலை வாங்கித் தருவது எப்போது? தமிழ் நாட்டிலுள்ள ஒரு

வொரு கிராமத்திலும் தத்தளிக்கும் நம்மவர் யாரிடமும் முறையிட்டால் புலனுண்டா? ஓநாய்க் கும்பலிலே ஒதுப்புறமாகப் பதுங்கிக் கிடக்கும் ஆட்டு குட்டியாக வாழும் நம்சமூகம் அரசாங்கத்தாலும் கவனிக்கப்படவில்லை. மேலும், ஒரு கிராமத்தின் முடிதிருத்தும் தொழிலாளியின் வருமானத்தைத் தமிழக்க் கிராமம் முழுவதிலும் பார்த்தால், ஒருவனின் சராசரி வரவு மாதம் 10 ரூபாய்க்கும் குறைகிறது என்றால், இவர்கள் வாழ்க்கை எப்படி இருக்கும்என்பதைச்சிந்திக்க வேண்டாமா?

(தொடரும்)

தி. நகர் மருத்துவர் சங்கம்

10-10-61 காலை 8 மணிக்கு செயலாளர் K. S. ஏழுமலை தலைமையில் தி நகர் சிரிபித்ரோடு 7-ம் எண் அமராவதி திருமண சத்திரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சங்கத்தலைவர் யாவரையும் வரவேற்றுப் பேசினார் M. K. சாமிநாதன் நாதஸ்வர கோஷ்டியினரால் இசைவிருந்தளிக்கப்பட்டது. தமிழ்நாடு மருத்துவர் சங்கத்துணைத் தலைவர் டாக்டர். V. குப்புசாமி திரு பெரியண்ண கவுண்டர் D சுப்பிரமணியன் ராமன் குமார் இளம் கண்ணன் முதலியோர் பேசினார்கள். குறிப்பாகப் பெரியண்ண கவுண்டர் கூறுயதாவது நீங்கள் ஒன்று சேர்ந்து மருத்துவர் சங்கம் அமைத்து கட்டுப் பாடாக செயல் படுவதற்கு மகிழ்ச்சி தெரிவித்து இன்னும் உங்கள் குறைகளைப் போக்க பிரிந்து வாழும் மருத்துவ மக்களை ஒன்று சேர்த்து சங்கத்தைப் பலப்படுத்துமாறு கூறினர். செயலாளர் கோபால் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

★

இராமநாதபுரம் மருத்துவர் சங்கம் வேண்டுகோள்

தமிழ்நாடு மருத்துவர் மத்திய சங்க அறிக்கைப்படி ஒவ்வொரு மாவட்டமும்; வட்டம் கிராமங்களிலுள்ள மருத்துவர்கள் தங்கள் முடி திருத்தும் தொழில்களில் மனித உரிமையைப் பறிக்கும் இழிவான தொழில்களைச் செய்யக் கூடாதென்றும் அடியிற்கண்ட வேண்டுகோள் துண்டுப்பிரசுர மூலகாக வழங்கப்பட்டது

இறந்தவர்களுக்கு முடியெடுப்பதில்லை யென்றும் அதன் சம்பந்தமாக ஊர்சொல்லுதல் மற்ற இதர தொழிலை செய்யக்கூடதென்றும் செய்யும் நபரை ஆதரிக்கக்கூடாதென்றும் கூறப்படுகிறது.

வெளியிட்டோர்

தாலுகா மருத்துவர் சங்கம்

இரமநாதபுரம்.

வரலாற்றில், முடிதிருத்தும் கலை

சு. குணாளன் கோலாலம்பூர், மலாயா.

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பர். அந்த சிரசின் சிறப்பான பாகம் சிகையே....சிகையின்றேல் நகை அரிது. எனவே சிகையைப் போற்றிப் பேணி பாதுகாக்கும் பணியை மேற்கொள்வோர் சமுதாயத்திற் தொண்டாற்று பவர்களே என்பதில் ஐயமில்லை.

உலகின் பழைமையான தொழில்களில் ஒன்று முடி திருத்தும் தொழில். இத்தொழில் இன்று நேற்று உதயமான தல்ல....என்றைக்கு மனிதன் தன்னை அழகுபடுத்திக்கொள்ள முற்பட்டானோ அப்பொழுது அவன் கையாண்ட முறைகளில் ஒன்று பல கோணங்களில் வளர்ந்துள்ள தலைமுடியையும் முகமுடியையும் கூர்மையான கற்களின் மூலம் நறுக்கி அழகு படுத்திக் கொள்வது. இத்தொழில்தான் கடந்த பன்னெடுங் காலமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இன்றையநிலை எய்தியுள்ளது. மேலும், இத்தொழில் எதிர்கால அணுயுகத்தில் நல்லதொரு ஸ்தானத்தைப் பெற்று விடும் என்பது சரித்திரம் காணப்போகும் உண்மை. உலகத்தின் ஓட்டத்திலே தொன்மையான பல புகழ்வாய்ந்த கலைகள் மறைந்து வரும் நேரத்தில் இம் முடிதிருத்தும் தொழிலோ மனித சமுதாயத்தின் வாழ்க்கையோடு பின்னப் பட்டு ஏற்றமிகு எழிலோடு திகழ்ந்து வருகிறது. என்றைக்கு இம் மனித இனம் இப்புவியின்கண் பூண்டற்றுப் போய்விடு கின்றதோ அன்றுதான் இத்தொழிலின் கடைசிப் பக்கமும் எழுதி முடிக்கப்படும்.

எகிப்தே முன்னோடி

நுணுக்கம் பலபடைத்த இத்தொழில் 2000 ஆண்டுகளுக்கு முன் பண்டைய கிரேக்க, ரோம, எகிப்திய, சீனர்களிடையே புகழ்ச்சியின் உச்ச நிலையில் இருந்து வந்தது. அந்நாட்களில் இத்தொழிலுக்குரிய கருவிகள் அனைத்தும் எகிப்தியநாட்டிலே தோன்றின வென்பதற்கு சான்றாக பலவித பழைமையான முடிதிருத்தும் கருவிகள் அந்நாட்டின் பிரமிட் கோபுரங்களுக்

கடியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அத்துடன் எஸ்பால் என்ற ஆங்கிலேயர் தாம் எழுதிய "பண்டைய எகிப்து" என்ற நூலில் எகிப்தியர்கள் தாம் ஆதியில் முடிதிருத்தும் கலைக்கு வேண்டிய பலவிதமான கருவிகளை உண்டு பண்ணினர் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இவ்வாறு விளங்கிய சிறப்பிடத்தில் இன்று மேலை நாடுகள் வீற்றிருக்கின்றன. இந் நிலைக்கு காரணம்? பண்பாட்டிலும், செல்வத்திலும், படைபலத்திலும், சர்வகலைகளிலும், உலக நாகரீக தொட்டிலாக விளங்கிய பண்டைய எகிப்து அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்ட பொழுது பல கலைகளில் முடிதிருத்தும் கலையும் அதனின்று வெளியேறியது. இவ்வாறு கீழைநாட்டு பழம்பெறும் முடித்திருத்தும் கலை மேலை நாடுகள் போய்ச் சேர்ந்தன.

அறிஞர்க்கு புகலிடம்

பண்டைய ரோம், கிரேக்க, முடிதிருத்தும் நிலையங்களில் தான் பல பேரறிஞர்கள் பலவித தத்துவங்களைப் பேசி, விவாதித்து உலகுக்கு உண்மையை ஈந்தனர் இம்மாதிரிப் பல உண்மைகளுக்கும் சிறந்த தத்துவங்களுக்கும் முடிதிருத்தும் நிலையமே பிறப்பிடமாய் இருந்திருக்கிறது. கிரேக்க நாட்டின் படையெடுப்புக்கும் அதனின் வெற்றிக்கும் இம் முடிதிருத்தும் தொழில் எவ்வாறு முதுகெலும்பெனத் திகழ்ந்த தென்பதற்குச் சான்றாக கீழ்க்கண்ட இச்சிறு நிகழ்ச்சியே போதுமானது.

கிரேக்க நாட்டைச் சார்ந்த தளபதி ஒருவன் தன் நாட்டின் அஞ்சல் கொண்டு செல்லும் ஒரு வீரனின் தலையை முழுவதும் சிறைத்து, அவ் வழுக்கை மண்டையில் இராணுவ இரகசியங்களை சுருக்கு வார்த்தையால் பச்சை குத்திய பிறகு முடியை நிறைய வளரச்செய்து எதிரிகளின் நாட்டுக்குக் கொண்டு சென்றானாம். இதனால் எதிரி நாட்டு ராணுவ அதிகாரிகள் அச்செய்கைகளை அறிந்து கொள்ளமுடியாமல் போய்விட்டது. அச் செய்தியாளன் உரிய நபரிடம் போய்ச் சேர்ந்ததும் மறுமுறையும் அவன் தலையை மொட்டை யடித்து அச்செய்தியைப் படித்து தெரிந்து கொண்டனராம்.

உலக கலாச்சாரங்களில் முடிதிருத்தும்

ஆதியில் மனிதன் நாகரீகத் தன்மை யடையாத காலத்தில் அவனுடைய முகமுடி சிறைக்கப்படாமலும் தலைமுடி வெட்டப்படாமலும், இருந்து வந்திருக்கிறான் என்பது நமக்குத் தெறிந்த உண்மையே. காலம் செல்லச் செல்ல மனிதன்

நாகரீகத் தன்மையுடைய அவன் தன் தலைமயிரை வெட்டியும் முகத்தை வழித்தும் கொண்டான்.

ஒவ்வொரு நாட்டு மக்களின் கலாச்சாரப் பண்பாட்டில் சவரத்தொழில் சிறந்து விளங்கி வந்துள்ள வரலாற்றினை நாம் ஆராய முற்பட்டால் அது அடைந்துள்ள பெருமையை கேட்க வியப்பாகத்தான் இருக்கும். குறிப்பாக ஆதியில் தலை முகமுடி சிரைத்தல் அன்றாடம் நடைபெறும் ஒரு செய் கையல்ல ஆனல் இது சில சமயங்களில் அவர்களின் சமூகப் பழக்கப்படி கையாளப் பெற்றது.

ரோமர்களிடையே சிரைத்தல் மதவிவகாரத்தைப் பின் பற்றியே நடந்துள்ளது. மேலும் மொராக்கோ நாட்டில் சிரைத்தல் திருமண நிகழ்ச்சியில் முக்கிய பங்கை யாற்றி யுள்ளது. மொராக்கோ நாட்டு மணவாளன் தான் திருமணம் செய்தபிறகு அவன் தனது தலை முடியைச் சிரைத்து அதைத் தனது பழைய ஆடையில் வைத்து தன் தாய்க்கு அனுப்பினன். அவர்களின் கலாச்சாரப்படி இம்முடி மூட்டை குழந்தையாக கருதப்படுகிறது. இம்முறையை அவர் கள் அனுசரிக்காவிட்டால் அவர்களின் பேய், பிசாசு. கணவன் மனைவி இருவர்களிடையே சண்டை சச்சரவுகளை ஏற்படுத்துமாம். பிறகு அம்மணவாளன் அம்மூட்டையை மூன்று முறை தாண்டிப் பேய்க்கு ஏதாகிலும் காணிக்கை செலுத்துவதாக சபதம் செய்து கொள்ள வேண்டுமாம். இந்தி யர்களிடையேயும், யூதர்களிடையேயும் ஆண்கள் கலியாணம் அல்லது மற்ற காரியங்களுக்காகவும் தலை முக முடியைச் சிரைத்துக் கொள்கின்றனர். இந்துக்கள் புண்ணிய ஸ்தலங் களுக்குச் சென்றால் அங்கு அவர்கள் தலையை மொட்டை யடித்துத் தங்கள் உடம்பில் இருக்கும் முடிகளை சிரைத்து குளித்துவிட்டுப் பிறகுதான் சுவாமி தரிசனம் செய்ய செல்லு வார்களாம்.

ஆப்பிரிக்காவில் தாய்மார்கள் தங்களின் குழைந்தை களில் ஒன்றை இழந்துவிட்டால் அவர்கள் தங்கள் தலை முடியில் ஒரு பகுதியை சிரைத்துக் கொள்வார்களாம். ரஷ்ய நாட்டில் சார் மன்னனல் சைபிரியா என்னும் நாட்டுக்கு அனுப்பப்பட்ட குற்றவாளிகள் தாங்கள் தப்புவிக்க முயன் றால், அவர்களின் தலைமுடியின் ஒரு பகுதி சிரைக்கப்பட்டு விடுமாம்.

இங்கிலாந்தில் ராணி எலிசபெத் அம்மையார் காலத்தில் யாரொருவர் இரண்டு வாரத்திற்கு மேல் முக முடியை வளர விடுகிறனோ அவர்கள் அபராதம் செலுத்த வேண்டுமாம்.

ஸ்பெயின் நாட்டு அரசன் பிலிப்தான் தாடிவைக்க முடியாது போனதால் ஸ்பானிஷ் மக்கள் யாரும் தாடிவைத்துக் கொள்ளக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தானும்.

கிரேக்க நாட்டு வீரன் மகா அலெக்சாந்தர் தன் படை வீரர்களுக்கு தாடி இருப்பதை அறிந்த அவன் இத்தாடியை எதிர் நாட்டார் பற்றி வெகு எளிதில் நம்மைவென்று விடுவார்கள் என்றெண்ணி தன் படைவீரர்கள் யாரும் தாடி வைத்துக்கொள்ளக்கூடாது. என்று கட்டளை பிறப்பித்தானும். அதிலிருந்து கிரேக்க வீரர்கள் யாரும் தாடி வைத்துக்கொள்ள முன் வந்ததில்லை.

முடிதிருத்துவோர்களும் வைத்தியர்களும்

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவிலே அறுவை சிகிச்சையாளரும், முடி திருத்துவோரும் ஒன்று கூடி ஒரே கூட்டுத்தொழில் நடத்தினர். அதாவது முடி திருத்துவோர் வைத்திய சிகிச்சை செய்யவும், வைத்தியர் முடிதிருத்தம் செய்வதுமாக இருந்தனர். ஆனல் 1745 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசர் ஜியார்ஜ் II என்பவர் சட்டத்தின் மூலம் இக் கூட்டுத் தொழிலை வேறுபடுத்தினர். அன்றிலிருந்து முடிதிருத்துவோர் தங்களுக்கென்று ஓர் சின்னத்தை ஏற்படுத்திக்கொண்டு பிரிந்தனர். அச்சின்னமானது இன்றைக்கு ஒவ்வொரு முடிதிருத்தும் நிலையத்திலும் காட்சிதரும் அந்த மூவர்ண சுழலும்தடியே இம்மூவர்ணம் தாங்கள் முன்பு செய்த வைத்திய தொழிலையே குறிப்பிடுகிறது. மேற்குறிப்பிட்ட அம்மூவர்ணத்தில் சிகப்புநிறம் அறுவை சிகிச்சை செய்யும்பொழுது வெளிப்படும் இரத்தத்தையும், நீலநிறம் மேற்கண்ட சிகிச்சை செய்யும்பொழுது வெளிப்படும் ஒருவித நீலநிறத் தண்ணீரையும். வெண்மை நிறம் ரணங்களுக்கு கட்டும் வெள்ளை பாண்டேஜ் துணியையும், தூய்மையையும், அறுவை சிகிச்சை செய்யும்பொழுது நோயாளியின் முகம்வெளிர் அடைவதையும் குறிப்பிடுகிறது.

மேலைநாடுகளில் முன்னேற்றம்

வருடங்கள் பல நூற்றூண்டுகளாகமாற அத்தொழிலுக்கான நவீன கருவிகளும் பலப்பல புதிய முடிவெட்டும் பாணிகளும் சிறுகச் சிறுக புகுத்தப்பட்டன. 18 ஆம் நூற்றூண்டின் இறுதியில் ஐரோப்பாவிலே குறிப்பாக பிரான்ஸ், ஜெர்மனி,

இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகள் மற்றெல்லா ஐரோப்பிய நாடுகளைவிட முடிதிருத்தும் தொழில் தரத்திலும் அதற்குரிய கருவிகள் உற்பத்தியிலும் பண்பட்டதொரு புகழையும் தேர்ச்சியையும், பெற்றிருந்தனர். அந்நாட்களில் ஐரோப்பிய உயர் குடியினர் பலவித அழகிய உயர்ந்த ரோமங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட டோப்பாக்களை திருநாள், விருந்துபசாரம் மற்றுமுள்ள விழாக்காலங்களில் கலந்து கொள்ளும் பொழுது அணிந்து சென்றனர் முடிதிருத்தும் கலையின் ஒரு பிரிவாகிய டோப்பா செய்யும்தொழிலை முடிதிருத்தும் நபர்களே மேற்கொண்டனர். இதன் மூலம் அவ்வழகிய டோப்பாக்கள் முடிதிருத்தும் தொழிலின் பெருமையை பார்முழுவதும் பறைசாற்றியது. இங்கிலாந்து அரசி எலிசபெத் அம்மையார் மூலம் பெண்கள் முடி சுருட்டும் தொழில் விரிவடைந்தது இதற்கு இவ் வம்மையார் பொருளுதவி மிக அளித்தார்கள். சின்னுட்களில் முடிதிருத்தும் தொழிலில் சுகாதாரம் விஞ்ஞானம், எலக்டிரிக் போன்ற துறைகள் புகுத்தப்பட்டன. அதே சமயத்தில் முடிதிருத்தும் தொழிலின் அடிப்படைக் கருவியான கைமிசினை அமெரிக்கா ஈந்தது.

முடிதிருத்தி சவரம் செய்தலே அடிப்படைத் தொழில் என்று எண்ணிக்கொண்டிருந்த மற்றைய நாடுகளுக்கு சவால் விட்டது. போன்று இங்கிலாந்து மற்ற ஐரோப்பிய சமுதாயத்துக் கேற்ற புதிய புதிய தொழில்களை உற்பத்தி செய்தது....அவைகளில் ஒன்று பெண்களுக்கு கூந்தல் சுருட்டுதல்....இத்தொழிலின் மகத்தான ஆரம்பம் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கமே.

முதன் முதலில் ஐரோப்பிய சீமாட்டிகளின் கூந்தல்களை சுருட்ட கத்திரிக்கோல் போன்ற பெரிய வடிவத்தில் உருண்டையான இருகம்பிகளை உடையதாய் பெற்ற கருவிகளைக் கொண்டு சுருட்டப்பட்ட இச்சுருளுக்கு ஆங்கிலத்தில் "மார்சிலிங் வேவிங்" என்பர். ஆனல் இச்சுருள் நீண்டு நிலைத்ததில்லை. காலம் செல்லச் செல்ல புதிய கருவிகள், முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு கூந்தல் சுருட்டும் தொழிலை நானுவித அலங்காரத்தில் நிறுவனமாக்கினர்.

மேலும் முடிதிருத்துவோர்கள் முடிக்கு செம்மையான வர்ணம் ஏற்றும் கலையையும் தெறிந்து கொள்ளலாயினர். இதனல் டோப்பாக்களுக்கு வேண்டிய விருப்பத்திற்கேற்ற வர்ணங்களை ஏற்ற முடிந்தமையால் வெள்ளிக் கம்பிபோன்ற நரைத்த முடியுடையோர்களுக்கு கறுப்பு வர்ணமேற்றி கிழவர்களை இளைஞர்களாக்கிய பெறுமை முடிதிருத்துவோர்களைச் சார்ந்தது.

கல்லூரிகளும் சங்கங்களும்

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முடிதிருத்தும் தொழிலுக்கு மேலை நாட்டில் சங்கங்கள். முடிதிருத்தும் தொழில் பயிலும் கல்லூரிகள், ஆகியவைகள் நிறுவப்பட்டு இத்தொழில் பலப்படுத்தப்பட்டது. மேற்கண்ட முடிதிருத்து வோர்களின் சங்கத்தினர் இத்தொழில் சுகாதாரம்,கண்ணியம் கட்டுப்பாடு, தொழிலகத்தில் வேலை நேரக்கட்டுப்பாடு, தொழி லாளர்களின் சம்பளம், விடுமுறை, வசதி, தொழிலில் அதிக வருமானத்தையும், முன்னேற்றத்தையும் காணுதல், முடி திருத்துவோர்களிடையே பரஸ்பரம் ஆகியவைகள் கண் காணிக்கப் படுகின்றன. அதோடு நில்லாது முடிதிருத்தும் தொழில் பயிற்றுவிக்கும் கல்லூரிகளின் மூலம் லக்ஷக்கணக் கான மாணவர்கள் முடிதிருத்தும் கலையை (விஞ்ஞானம், மனித, உடற்கூறு, ரசாயனம்) கசடறக்கற்று எதிர்காலத்தில் நல்லதொரு பாண்டித்ய முடிதிருத்துவோராகத் திகழ்கிறார்கள்.

மருத்துவ மனை போன்ற சிறப்பு

முடிதிருத்தும் நிலையங்கள் மருத்துவமனை போன்று சுகாதார ரீதியாகப் பேணி காக்கப்படுகிறது. அத்தொழி லகத்தில் பயன் படுத்தும் கருவிகள் அனைத்தும் மருந்து நீரில் அடிக்கடி நனைக்கப்பெற்று பயன் படுத்தப் படுகின்றன. அத்துடன் "ஸ்டர்லைசர்" எனும் மின்சாரத்தில் இயங்கும் மருந்து பெட்டியிலும் பயன்படுத்தும் கருவிகளை கிருமிகள் அழிய அவிக்கப் படுகின்றன. மேலைநாட்டு முடிதிருத்து வோர்கள், தோல், முடி வியாதி பற்றியும், மின்சார கருவி களின் உபயோகம் பற்றியும் ஆகிய நானுவித தொழில்களை கற்று அதைத் தங்கள் நிலையங்களில் செயல் படுத்தி வரு கிறார்கள்.

முடிதிருத்தும் நிலையங்களில் பயன்படும் மின்சார கருவிகளும் அதன் உபயோகமும்

வயலட்ரே :—இஃது சூரிய ஒலியைப் போன்று சக்தி படைத்தகருவி. இக்கருவி மனித உடம்பில் ஏற்படும் சர்வசரும நோய்களையும், புண், சுளுக்கு, சளிபிடித்தல் சோம்பிக் கிடக்கும் தசை ஆகியவைகளை குணப்படுத்த வல்லது.

தலை மசாஜ் :—இக்கருவியின் நுனியில் பற்கள் போன்ற வட்டவடிவமான ரப்பரால் செய்யப்பட்ட இச்சாதனம் தலையை மசாஜ் செய்வதிற்கு உதவுகிறது, மூளைக்கு சரியான இரத்த ஓட்டத்தையும், மயிர்காம்புகளையும் பலப்படுத்த வல்லது.

முக மசாஜ் :—இக்கருவியும் மேற்கண்ட கருவியைப் போன்று அதிரும் தன்மையுடையதுதான். ஆனல் இதன் நுனியில் பஞ்சுபோன்ற மிருதுவான ரப்பரால் ஆக்கப் பெற்றது. இக்கருவி முகத்தின் தசைகளை அசைக்கவல்லதால் முகத்தில் அமையப் பெற்றுள்ள கண், காது, மூக்கு, போன்ற உருப்புகளுக்கு நிறைய இரத்த ஓட்டத்தை தந்தும், அவைகள் பழுதுபெற இயங்க உதவுகிறது. முகத்தில் ஏற் படும் சுருக்கங்களையும், பருக்களையும், புள்ளிகளையும் மறைக்க வல்லது.

ஏர்ட்ரையர் :—காற்றுதரும் இக்கருவி நினைந்த முடியை உலர்த்த பயன் படுகிறது.

வியாபாரம்

மேலை நாட்டு முடிதிருத்தும் நிலையங்களிலே முடியைப் பற்றியுள்ள வியாதிகளை குணப்படுத்த வல்ல மருந்துகளையும், முடி வளர்ச்சிக்கான போஷாக்குத் தரக்கூடிய சத்துள்ள தைலம், கிரீம், களிம்பு லோஷன் போன்றவைகளையும், சொந்த சவரம் செய்துகொள்வோருக்கான சேவிங்சோப் பிரஷ் சிறிய முகம் பார்க்கும் கண்ணடி, ரேசர், போன்ற பொருட்களை யும் தங்கள் தங்கள் நிலையங்களிலே வைத்து விற்பனை செய்து வருகிறார்கள். இதனல் முடிதிருத்திக் கொள்வோர்கள் முடி திருத்தும் தொழிலில் மட்டும் உழன்றுகொண்டிராது மற்ற இம் மாதிரியான பொருள்களை வைத்து வியாபாரம் பண்ணும் சந் தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்வதால் முடித்திருத்தும் தொழிலும் நாளடைவில் பல கோணங்களில் விரிவாக்கப்படு கின்றது.

முடிதிருத்தும் தொழிலின் முடிதிருத்துவோர்களின் வளர்ச்சி என்ற சித்தாந்தத்தை அவர்கள் மறந்துவிடவில்லை.

தொழில் பற்றிய பத்திரிகைகள்

முடிதிருத்தும் தொழிலைப் பற்றிய பத்திரிகைகள் பல மாதவார இதழ்களாக வெளிவருகின்றன.

இப்பத்திரிகைகள் முடித்திருத்தும் தொழிலில் அடைந்து வரும் வளர்ச்சி அத்தொழிலுக்குரிய கருவிகள் கண்டு பிடிப்பு களும் அதன் உபயோகமும்,' நரை மாற்றும் மருந்துகள், முடி உதிர்வதைத் தடுப்பதற்கான மருந்துகள், தொழிலைப் பற்றிய கேள்வி பதில்கள் மார்க்கெட்டில் நிலவிவரும் சிகை அலங்கரிப்பான கிரீம், லோஷன். முடிதிருத்த உதவக்கூடிய

மிஷின், கத்தி கத்திரிக்கோல், மற்றும் ஏனைய பொருட்களின் விளம்பரங்கள் முடிதிருத்தும் தொழிலைப்பற்றிய ஆக்ககரமான கட்டுரைகள். முடிதிருத்துவோர்களிடையே பரஸ்பரத்தை உண்டாக்குவதற்கான யோசனைகளும் மற்றும் அநேக கருத்துக்களையும் தாங்கி வெளிவருகின்றன.

முடிதிருத்தும் போட்டிகள்

வருடத்திற்கு ஒருமுறை மேலை நாடுகளில் பல நாட்டு முடிதிருத்துவோர்களை அழைத்து அவர்களின் கைத் திறன்களை நிரூபிக்க ஏற்பாடு செய்து வெற்றி பெற்றவர் களுக்கு பல பரிசுகள் வழங்கி அவர்களை ஊக்குவித்து வரு கிறார்கள். அம்மாதிரியான போட்டிகளை தமிழகம் காண வேண்டும் கண்டு முடிதிருத்துவோர்களின் கைவன்மையை தமிழக மக்கள் நன்கு அறிந்து கொள்ளட்டும்.

மேலை நாட்டு முடிதிருத்தம் போட்டிகளில் பல பாணியில் முடிவெட்டுதல், தாடி, மீசை அமைத்தல், பல அழகிய முறை களில் முடி சுருட்டுதல், தலைமுடிக்கு விதவிதமான வர்ணத்தில் வர்ணம் ஏற்றுதல், அதிவிரைவில் முடிவெட்டி சவரம் செய் தல், முடிதிருத்தும் நிலையங்களை அழகுடனும், சுகாதாரத் துடனும் வைத்திருத்தல் போன்ற மேலும் பல அனேக அம் சங்களை இப்போட்டியில் இடம் பெறுகின்றன.

இம்மாதிரியான முடிதிருத்தும் போட்டிகளினால் அகில உலக முடித்திருத்துவோர்களிடையே பரஸ்பரத்தை உண் டாக்குவதற்கும், இத்தொழிலின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத் திற்கும் பாடுபட செய்வதற்கும். ஒருவருக்குத் தெரிந்த கலைகளை மற்றவருடன் பரிமாறிக் கொள்ளவும் இந்த அகில உலக முடிதிருத்துவோர் மாநாடு ஊன்றுகோலாக அமை கிறது.

எனவே இம் முடிதிருத்தும் தொழிலை வயிறு வளர்க்க மட்டும் பயன்படுத்துதோ டல்லாமல் அதனைப்பேணி வளர்த்து புதுமை கொள்ளச் செய்வதே இம் முடிதிருத்துவோர் தங்கள் தொழிலுக்குச் செய்யும் நன்றி அத்துடன் தங்களது முடிகளை நல்லதொரு நிலையில் புதுப்பாணியில் அழகுடன் திருத்திக் கொள்ள விரும்பும் பொது மக்களும் இத்தொழி லுக்கு மதிப்பு தருதல் வேண்டும். இதன் மூலமே இத்தொழில் இத்தமிழகத்தில் சீறும் சிறப்புடன் 'வளர ஏதுவாயிருக்கும். இவ்வுண்மையை இத்தமிழ் நாட்டுப் பொது மக்களும், முடி திருத்துவோர்களும், உணர்ந்து அதற்கான முயற்சியில்

இறங்கியதேயில்லை. காலமும் முடிதிருத்தும் சங்கமும் அவர்களுக்கு வழிகாட்டும்.

எதிர்காலத்தில் முடிதிருத்துவோர்களும், முடிதிருத்தும் தொழிலும் நல்லதொரு செழிப்பான வளர்ச்சியுடன் பலம் பெறுவிட்டால் இந்நாட்டு முடிதிருத்துவோர் தொழில் உறுதியாகப் பின்தள்ளப்படுவார்கள் என்பதை நாம் மறக்கலாகாது.

வாழ்க முடிதிருத்துவோர் சமுதாயம்

வளர்க முடிதிருத்தும் கலை.

★

சிதம்பரம் மருத்துவர்கள் கூட்டம்

சிதம்பரம் மருத்துவர்கள் கூட்டம் 30-9-51 மாலை 6 மணிக்கு ஜவகர் தெரு 25-ம் நெம்பர் வீட்டில் ஸ்ரீ K. கோவிந்தசாமி வைத்தியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஷை கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டன.

தீர்மானங்கள்

1. சிதம்பரம் சின்ன காஜியார் தெருவிலிருக்கும் மருத்துவர்கள் பொது மடத்தை இது வரையில் டிரஸ்டி மேற் பார்வையில் நடத்தி வந்த தி. சுவாமிநாத வைத்தியர் மனைவி செகதாம்பாள் அம்மாள் ஷை மடத்தின் வருமானத்திலிருந்து சரிவர அதற்கு செய்யவேண்டிய தரும பரிபாலனங்களைச் செய்யாததாலும், ஷை மடத்தின் சொத்துக்களை தானே ஏகபோகமாய் தப்பு வினியோகம் செய்திருப்பதாலும், தகுந்த கணக்கு வழக்குகள் சொல்லாததாலும் ஷை தரும பரிபாலனங்களை மேற்கொண்டு சரிவர நடத்த புது டிரஸ்டிகள் 3 பேர்களை அடுத்த கூட்டத்தில் தேர்ந்தெடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

2. ஷை மடத்திலிருக்கும் காலி இடத்தில் கூட்டம் போடுவதற்காக ஒரு கொட்டகை போடுவதென்றும், அது சம்பந்தமாய் முனிசிபல் ஆபீசுக்கு அனுமதி மனு போட்டு அதற்கு வேண்டியவைகளைப் பார்ப்பதற்காக தற்காலிகமாய் ஸ்ரீ G. கோதண்டபாணி அவர்களை நியமிக்கப்பட்டது.

3. "மருத்துவ மன்றம்" என்னும் பத்திரிகையை ஸ்ரீ G. கோதண்டபாணி அவர்களின் சொந்த செலவில் தருவித்து மருத்துவ அன்பர்கள் வாசிக்க உதவும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

இங்ஙனம்,

சிதம்பரம் மருத்துவ குலத்தவர்கள்.

குழந்தை பிணியும் நிவர்த்தியும்

(ச. ஆறுமுகநாதன் S. P. M.)

1. பெற்றோர் சுரோணித சுக்கிலத் தின்
பிழையாய் பிறக்கும் குழந்தைகட்கு
பற்றிடும கிரந்தி, கருங் கிரந்தி
படர்ந்திடு மப்பா செங்கிரந்தி
மற்றும் தாய்ப்பால் புளிப்புற லால்
மாந்தம் தோஷம் கணையோடு
தொற்றிடும் வலிப்பு கரப்பான்வர
துவங்கிவிடும் வயது பனிரண்டுள்

2. பற்கள் முளைக்கும் பருவத்தில்
பாலர் தமக்கு காய்ச்சலுடன்
சிற்சில சமயம் கழிச்ச லதும்
திகைக்கச் செய்யும் வலிப்புமிவை
முற்றிய நிலையில் உண்டாகி
முடக்கும் சந்நி ரோகமதும்
பற்றிடும் குழந்தை ரோகமென
பகன்றார் முன்னோர் பகன் றனரே!

3. வெட்ப தட்ப நிலைமாற்ற
வேற்றுமை யாலே குழந்தைகட்கு
உட்புகும் நோய்கள் வராது
ஒழித்து நீக்கத் தக்கபடி
நுட்பமாய் பாலர் தமைப் பெற்றோர்
நோக்கி வந்தால் கொடும் நோயை
திட்டமாய் நீக்கி குழந்தைகளை
திடகாத் திரமாய் வளர்த்திடலாம்

4. அழுகைக் குறியால் குழந்தைகளை
அணுகிய நோய்கள் இன்னதென
முழுதாய் தெரிந்து உணர்த்திடலாம்
முக்கியமான மாந்தந் தான்
தழுவிய குழந்தை தன்வயிற்றில்
தாங்க முடியா வலிகாணின்
அழுது கண்ணீர் தனைப் பெருக்கி
அமர்ந்து பின் அலரி அழுதிடுமே

5. அழுதலோடு நில்லாமல்
அதன் கால்தன்னை வயிற்றோடு
முழுதும் மடக்கி வைத்திருக்கும்
முறையை காண்ப தோடின்னும்
எழுந்த மாந்தம் கடுமையுறில்
இலங்கு தலையுடல் சூடாயும்
முருங்கால் கைகீழ் குளிர்ச்சியுமாய்
முகக்களை இழந்து இருந்திடுமே

6. நெஞ்சில் கபந்தான் மிகுந்திருந்து
நிறைய வலியும் கண்டதெனில்
கொஞ்சமும் சத்தம் செய்யாது
குழந்தை கண்ணீர் வடிக்காது
மிஞ்சா இடையிடை பெருமூச்சு
விட்டே லேசாய் இருமுமதன்
பிஞ்சுத் தலையில் வலிவேறு
பிணிகள் கண்டால் சிணுங்கியழும்

7. பற்கள் முளைக்கும் சமயத்தில்
பாலர் முகந்தான் கடுகடுத்து
நிற்கும் நிலையும் தலையுடலாம்
நிறையச் சூடாய் இருப்பதுவும்
மற்றும் வாய்நீர் வடிதலதும்
மழலையர் கையில் கிடைத்தவற்றை
பற்றி வாயால் கடிப்பதையும்
பார்த்தே குறியை அறிந்திடுவீர்

8. தத்தம் குழந்தை நோய்களினல்
தாக்குறு திருக்க கருவுறுந் தாய்
சித்தர் கண்ட கருவளர்க்கும்
சீரிய எண்ணெய் தனைமுறையாய்
சத்தியைப் போற்றி ஐந்தேழு
சாரும் திங்களில் ஐந்தேநாள்
நித்தமும் காலை மாலையொரு
நிறை தேக்கரண்டி உண்டிடலாம்.

9. இத்தை அருந்தலால் கருக்குழியில்
இனிதே வளரும் குழவிக்கு
சுக்கில சுரோணித் குற்றத்தால்
தோற்றிடும் நோயை தொலைப்பித்து

மிக்க நலத்தை தாய் சேய்க்கு
மேலாய் தந்து பிரவசத்தில்
சிக்கலை நீக்கி நலம் நல்கும்
திருவாம் எண்ணெய் முறைகேளீர்

10. அரைப்படி சிற்றா மணக் கெண்ணெய்
ஆவின் பால்தால் கால்படியும்
உரைப்படி அரிந்த வெங்காயம்
ஒன்றே கால்படி தன்னோடு
வரையதாய் கருஞ்சீ ரகமது தான்
வைத்திடு இரண்டு விராகனெடை
சிரத்தையாய் கழுதைப் பாலதுதான்
சேர்த்திடு கால்படி சேர்த்திடுநீ

11. கழுதைப் பால்தான் கிடைக்காத
காலந் தன்னில் அதற்கீடாய்
பழுது இல்லா பூவரசன்
பட்டைச் சாறது படியரைக்கால்
செழுமை மிக்க பீனாரி
சங்கங் குப்பி சாரதுதான்
முழுமை இன்றி படி அரைக்கால்
முறையாய் சேர்த்து காய்ச்சிடலாம்

12. சேர்த்த சரக்குகள் அத்தனையும்
செவ்வையாய் கலக்கும் முன்பாக
நேர்த்தியாய் கருஞ்சீ ரகம் தன்னை
நுணுக்கி பொடித்து ஒன்றாக்கி
மூர்த்தியை வணங்கி அடுப்போற்றி
மூட்டிடும் தீயை சிறிதாக்கி
பார்த்திடு வண்டல் மெழுகு பதப்
படரும் சமயம் தொட்டுப்பார்

13. தொட்டுப் பார்க்கில் கொதிக்கும்நெய்
சூடிளம் வெந்நீர் போலிருக்கும்
கிட்டிய திதுவே நல்ல பதம்
கீழே இறக்கிடு உடனடியாய்
கொட்டிடு வேறு பாத்திரத்தில்
குளிர்ந்திடும் விரைவில் அதையெடுத்து
புட்டியில் அடைத்து பூவையர்க்கு
புகன்ற முன்னளவு கொடுத்திடலாம்

(வளரும்)

கருங் கடற்கரை

(சு. ந. சொக்கலிங்கம், M.A.)

★

மருத்துவ மன்றத்தில் முதல் இதழில் 'மாஸ்கோவில் மூன்றாண்டுகள்' என்ற கட்டுரையைப் படித்தவர்கள் சோவியத்து யூனியன் ஆட்சியையும், மாட்சியையும் அறிய அவாவக் கூடும். சோவியத்து மக்கள் உடல் நோய் அகற்று வதற்கும் உடல் உரம் பெறுவதற்கும், ஓய்வு பெற்று மன மகிழ்ச்சி கொள்ளுவதற்கும் ஏற்ற இடமாய் அமைந்திருக்கும் கருங் கடற்கரையைப் பற்றிச் சிறிது அறிவது இன்றியமை யாததாகும்.

கருங் கடலைப் பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கக் கூடும். சின்னஞ் சிறுவயதில் பாட்டிகள் சொல்லும் கதையை மிகுந்த ஆர்வத்துடனும், கவனத்துடனும் கேட்டிருக்கிறோம். சில கதைகளில், சிலர் உயிர்நிலை பாற்கடலையும், தயிர்க் கடலையும், செங்கடலையும், கருங்கடலையும் தாண்டி, ஒரு புதரிலுள்ள குகையில் வாழும் கிளிகளுள் இருந்தன என்றும், அஞ்சா நெஞ்சினர் அந்த உயிர் நிலைகளைத் தேடிச் செல்லப் பாடு பட்டுக் கடைசியாகக் காரியத்தை முடித்தனர் என்றும் கேட் டிருக்கிறோம். பிஞ்சு மனத்தில் அஞ்சாமை வளர வேண்டும், எதையும் அலுக்காமல் சலிக்காமல் அரும்பாடுபட்டுச் சாதிக்க வேண்டும் என்றெல்லாம் கருதி இவை போன்ற கதைகள் சொல்லப்படுகின்றன. என்று நினைக்கிறேன். கதைகள், கற்பனைக் கதையாயினும், நல்ல கருத்தை ஊட்டுவதற்குத் தொன்று தொட்டு நாட்டுப் புறங்களில் சொல்லப்பட்டு வரு கின்றன.

தொடக்கப் பள்ளிகளில், நில நூலைப் பற்றிப் படிக்கத் தொடங்கியதும் கருங்கடலைப் பற்றிக் கேள்விப்படுவோம். ஏன் அதற்கு அப்பெயர் வந்தது, அப்பெயரை அதற்குச் சூட்டியது யார் என்பன போன்ற ஐயங்கள் மனத்தில் எழுந்து மறையும். வீட்டிலோ வகுப்பிலோ கேட்க வாய்ப்பிருக்காது. ஒருவேளை கேட்டாலும், வேண்டாத விஷயத்தில் ஏன் தலை யிடுகிறாய், இருப்பதைப் படித்துத் தெரிந்து கொள், போதும்' என்று எதையும் அறிய விழையும் மனத்தைத் தடுத்து, நல்லறிவுரை கூறியதாகக் கருதுவர்.

கருங்கடலை நேராகச் சென்று பார்த்தால், நம் ஐயங்க ளெல்லாம் நீங்கும். அங்கு ஒரு மாதம் குடும்பத்துடன் தங்கி யிருந்தபோது கண்டதையும், கேட்டதையும் குறித்துச் சுருக்க மாக வரைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இங்குப் போய்ச் சேருவதற்கு மாஸ்கோவிலிருந்து விமானம் வழியாகவும், இரயில் மூலமாகவும் போக வசதிகள் உள்ளன. இக்கடற்கரையில் ஒதெஸ்ஸா, எவ்படோரியா, செவஸ்டபோல், யால்டா, ஸோசி, காக்ரா, சூகுமி, பாடுமி போன்ற பல வனப்புடைய இடங்கள், பல்வகை வசதிகளுடன் அமைந்துள்ளன. இவைகளுள் யால்டா என்ற இடத்திற்குப் போவதற்கு, மாஸ்கோவிலுள்ள கூர்ஸ்கையா என்ற இடத்தில் இரயில் ஏறவேண்டும். இந்த இரயில்வே நிலையத் திற்கு அருகில்தான் நம் தூதுவராலயம் (Indian Embassy) உள்ளது. கூர்ஸ்கயா என்பது பெரிய ரயில் நிலையம்; பூமிக்கு அடியில் ஓடும் பல மின்சார ரயில்கள் (Metro) சந்திக்கும் இடம் சாதாரண ரயில்களும், சரக்கேற்றிச் செல்லும் கூட்ஸ வண்டிகளும் மின்சார வண்டிகளும் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருக்கும். நம்முடைய மூட்டை முடிச்சுக்களை நாமே தூக்கிக்கொண்டு, ரயிலில் ஏறுவோர் வரிசையில் நின்று ஒழுங்காகப் போகவேண்டும். சிலர் பாரமான சாமான்களைப் முதுகில் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்தால், நமக்கு ஆச்சரியமாக இருக்கும். பலமான சாமான்களைத் தலையில் தூக்கும் பழக்கம் கிடையாது. ரயிலும் நீளமானதாகவும், பெரி யதாகவும் இருக்கிறது. நம் ரயில்களைப் பார்த்த கண்களுக்கு அந்தப் பெட்டிகளும் எஞ்ஜினும் பிரம்மாண்ட மானதாகத் தோற்றும். ஒவ்வொரு பெட்டியிலும் பல சிறு அறைகள் உள்ளன; நமக்கு வேண்டிய உதவிகள் செய்ய, ஒவ்வொரு பெட்டிக்கும் ஓர் அம்மையாரை நியமித்துள்ளனர். அந்த அம்மையார், நம்முடைய டிக்கெட்டுகளைப் பார்த்துவிட்டு, அருமையான படுக்கை, போர்வை, துண்டுகள் ஆகியவற்றை நமக்குக் கொடுப்பார்.

நாம் போய்ச் சேருவதற்கு ஏறத் தாழ ஒரு நாள் ஆகு மாதலால், இடை வேளைகளில் பருகத் தேநீர் (Tea) கொடுத்து நாம் இறங்குவதற்கு முன்னர் அதற்குரிய பணத்தை வாங்கிக் கொள்ளுவார். இந்தியத் தேயிலைக்குச் சிறந்த மதிப்பு; கடைகளில் நம் தேயிலையை மக்கள் விரும்பிக் கேட்டு வாங்குவதைப் பல முறை பார்த்திருக்கிறேன். சீன நாட்டுத் தேயிலையும் விற்கப்படுவதுடன் ஜியார் ஜியாவில் விளையும் தேயிலையும் கிடைக்கிறது. அந்த அம்மையார்,

அடிக்கொரு தடவை நம் அறைகளைப் பெருக்கித் தூய்மை யாகவும், துப்புரவாகவும் வைத்திருப்பார். பெட்டியைத் துடைத்துக்கொண்டும், கழுவிக்கொண்டும், சுறுசுறுப்பாகக் காணப்படுவார். நாம் உண்ண வேண்டுமானால், இரயிலின் கடைசியிலுள்ள உண்ணும் பெட்டிக்குச் (Dining Car) செல்ல வேண்டும். பெட்டிக்குள்ளிருக்கும் வழிகளின் மூல மாக, அங்குப் போகலாம். உணவு பரிமாறுவோர் பெண்கள். மரக்கறி உணவு கொள்வோருக்கு, வாய்க்குச் சுவையாகக் கிடைப்பது அருமை. அங்குப் போனதும், புலால் மணம் வீசி மூக்கைத் துளைக்கும். உண்ணுவதற்கு ஓர் இடம் பார்த்து அமர்ந்ததும், 'என்ன வேண்டும்' என்று இனிய முகத்துடன் கேட்பார். ஊன் உணவை உண்ணும் வழக்க மில்லை என்றவுடனே, வியப்புடன் நோக்கி "மாட்டுக் கறி யையும், பன்றிக் கறியையும் தின்ன மாட்டீர்களா? மீன் கூடவா சாப்பிட மாட்டீர்கள்? கோழிக் கறியைக் கூடவா தொடமாட்டீர்கள்? என்று ஒரே மூச்சில் கேட்டுப் பெரு மூச்சு விட்டுவிட்டு, வேறு எதைத்தான் உண்ணப் போகிறீர் கள்; சரி, நீங்கள் எப்படித்தான் உயிர் வாழ்கிறீர்கள், உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா, குழந்தைகள் இருக் கின்றனவா என்று அடுக்கடுக்காய்க் கேள்விகள் கேட்ட பின்பு, 'எதற்காகச் சுவை நிறைந்த ஊனைக் கொள்ள மறுக்கிறீர்கள். ஏதாவது மதக் கோட்பாடா, கடவுளுக்குப் பயமா என்று நம்மைப் பரிவுடன்-பணிவுடன் பார்த்து வினவு வார். தெரிந்த அளவிற்கு ருஷ்ய மொழியைப் பயன்படுத்தி' இந்த முறையில் வளர்ந்துவிடடேன்; வேறு ஒன்றுமில்லை என்று சுருக்கமாகப் பதில் சொன்ன உடனே இந்தியாவில் எல்லோருமே இப்படியா. அல்லது சிலர் தாம் இப்படியா என்று கேட்டார். பலர் ஊன் உணவு கொள்வர்; சிலர் மட்டும் மரக்கறி உண்கின்றனர் என்று சொல்லிக் கொண் டிருக்கும் போது, பின்புறமாக இருந்த ஒருவர் 'நீங்கள் ஜெயினரா என்று கேட்டார். இல்லை என்றேன். சரி, அப்படியானால் பிராம்மணரா? என்று தொடர்ந்தார். கொஞ் சம் செய்தி உணர்ந்தவர் போலத் தெரிகிறார், ஆகவே விரி வுரை ஆற்றலாம் என்ற ஆர்வத்தோடு நம் நாட்டுச் சாதி முறை, உணவு முறை, பழக்க வழக்கங்கள், கடவுள் கொள்கை ஆகியன குறித்துக் கூறினேன். ஆர்வத்தோடு கேட்டு நன்றி கூறினார். நானும், எனக்கு வேண்டிய ரொட்டி கறுப்பு ரொட்டி. பிஸ்கோத்து, பாலாடைக் கட்டி, வெண் ணெய், பழங்கள் முதலிய சத்துள்ள உணவுகளை அளவுடன் மென்று தின்றேன். என்னை இரக்கத்தோடு பார்த்திருந்த

ஓர் அம்மையார் இவை எல்லாம் சாப்பிட்டால் போதுமா, கருங் கடற்கரையில் ஒரு மாதம் தங்கும்போது அங்குக் கிடைக்கும் அரிய மீன்களைச் சாப்பிடுங்கள் ; இந்தக் கடலில் கிடைக்கும் மீன்கள் உங்கள் நாட்டில் கிடைக்காமலிருக் கலாம்'; அவ்வளவு தூரத்திலிருந்து வந்து, நலம் பேணு விடு தியில் தங்கி, இதன் சுவை பார்க்காமல் சென்று விடாதீர் கள்' என்று மொழிந்தார். அன்பாகப் பேசுகிறவர்களை மறுத்துப் பேச வேண்டாம், நம் விருப்பப்படி நடந்துகொள்ள லாம் என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டேன்.

இரயிலில் பிரயாணம் செய்யும்போது, அலுப்பு ஏற் படாமலிருக்க வானொலிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கும். அன்றாடச் செய்திகளைக் கேட்கலாம், பல தேசீய மொழி களின் இசைப் பாட்டுகளைக் கேட்கலாம். சில தேசீய மொழிகளின் நாட்டுப் பாடல்களைக் கேட்கும்போது, பொருள் தெரியாவிட்டாலும் மெய்சிலிர்க்கும். இசைக் கச்சேரியை அனுபவிக்கத் தெரியாதவர்களும், இந்நாட்டுப் பாடல்களில் மனம் பறிகொடுப்பர். இங்கு மேஜையும், நாற்காலியும் போடப்பட்டிருப்பதால் கடிதமோ, கட்டுரையோ, நாட் குறிப்போ எழுதலாம். நமக்கு நேரம் போகாமலிருக்கும் போது, பக்கத்தி லிருப்பவர்களுடன் சிறிது நேரம் வம்பளக் கலாம். நம் நாட்டு நல்லபாம்புகளைப் பற்றியும், யானைகளைக் குறித்தும் கேட்டுவிட்டு, ஆர்வம் கண்களில் தெரிய இந்தி சினிமாக்களைப் பற்றி உசாவுவர். இரயிலில் செல்லும்போது இருமருங்கும் வானுற வளர்ந்த மரங்களும், கறுங் காடுகளும், அடர் காடுகளும், புதர்களும், சிறு மலைகளும், பெரும் ஏரி களும், கால்வாய்களும், ஆறுகளும் கண்ணுக்கினிய காட்சி நல்கும். சிம்பரா பெல்சந்திப்பிற்கு வந்ததும், இரயிலை விட்டு இறங்கவேண்டும். நலம்பேணு விடுதிகளைச் சேர்ந்த அலுவலர் அங்கு இறங்கியவர்களைப் பார்த்துப் பேசி அவ ரவர்க்குரிய பஸ்களில் ஏற்றுவர். மலையின்மீது வளைந்து, வளைந்து செல்லும் பாதைகள் வழியாக பஸ் விரைந்து போகும். உதகமண்டலத்திலும், கோடைக்கானலிலும் இருக் கும் சாலைகளைப் போல அமைந்துள்ளது இப்பாதை. இச் சாலையில் பஸ் ஓடும்பொழுது எதிரில் நிலவும் மலையையும், சாலைக்குப் பக்கமாக அலையடிக்கும் கடலையும் மாறிமாறிப் பார்க்கும்போது, கோடைக்கானலும், குமரியும் மணந்திருப் பது போல் இலங்கும். யால்டாவுக்கும் அப்பாலுள்ள சிமீஸ் என்ற இடத்திற்குச் சென்று, அங்குக் கவின்பெறக் கட்டப் பட்டுள்ள லெனின் நலம்பேணு விடுதிக்குச் சென்றேன்.

(வளரும்)

ஈரடி இருநூறு இனிய செய்யுள் தொடர்கள்

I

அமைதி ஆண்மைக்கு அணியரன், 68
அன்னை வடிவதுவே அன்பு, 10
உள்ளத்தே உள்ளது அமைதி, 69
எழுத்தாளன் கண்ணே உலகு. 36
5. எழுத்துள் ஒளித்தல் எளிதன்று, 40
ஐயந் தருவது அறிவே, 82
கட்டுண்டார் என்பர் கடன்பட்டார், 126
காக்கக் கடவது இளமை, 136
சொல்தேட லில்லா கருத்து, 39
10. தக்கார்க்கே இன்பம் தனிமை, 73
தாய்மையின் மிக்க தவமில்லை, 8
தெள்ளிய ரென்பர் திறனுய்ந்தார், 49
தொண்டர்க்குக் காப்பேன் பிற, 91
தொண்டர்க்குத் தொண்டன் இறை, 94
15. தோன்றுது இறையின்றித் தொல்லுலகம், 8
பட்டால் படுதலால் பாஎன்ப, 28
படையால் பகையழித்தல் இல், 113
பாமணக்கும் உள்ளம் பயன் மறக்கும், 24
பொதுவுரிமைப் பற்றே புகழ், 112
20. போர்க்கெழுவார் மக்களோ, பொய்எழும், 117
மனத்தடிமை கொள்வார் மதிவல்லார். 66
மனமடங்கக் கற்றரே கற்றார், 64
மனமின்றேல் மாந்தர் இனமின்றும், 64
முகத்தழகு மூப்பாற் கெடும், 59
25. மெய்மைக்கே மேனி அழகு, 57
வாளின் வலிதே எழுதுங்கோல், 37

II

அகத்தழகு ஒன்றின் அழகும் அழகாம், 59
அமைதி யுறினல்லால் ஆகுமாறுண்டோ, 69
அழிவென்ப வெல்லாம் அழிவல்ல மாற்றம், 16

அறவெற்றி வேண்டின் அமர்ந்தன்பால் வெல்க, 71
அறிவுழுத பின் புலத்தில் ஐயம் முளைக்கும், 8
ஆக்கல் அரிதாம் அழித்தல் மிகஎளிது, 53
இழுத்து மனத்தை இசைப்பது இசை, 31
உழைப்பார் ஒருகோடி உண்பார் சிலரே, 121
எழுத்தே எழுதியோர்க் காட்டி விடும், 40
ஒற்றுமை யன்றி உயர்துணை ஒன்றில்லை, 123
கட்டிய பாவேறு கனிந்தெழுந்த பாவேறு, 27
கன்னல் கமழும்பாக் கண்பட்டுக் கட்டழிந்தேன், 22
தொண்டின் பெருமை துணைக்கூற யார்வல்லார், 94
பட்டார் கடனொருகால் பட்டார் புதைமணலில், 128
பொய்மையை உள்மறைக்கும் போர்வை அழகன்று, 57
வழிபாடு நண்ண வளரும் உயிர், 87
வழிபாடு பற்றின் வழிச்சென்று சேர்வர். 86

குறிப்பு:- 'ஈரடி இருநூறு' என்பது, குறள் யாப்பில் இருநூறு செய்யுட்கள் கொண்ட சிறந்த இலக்கியம். திருவள்ளுவர் திருக்குறளில் வெளிப்படையாக வராத இசை, இலக்கியம், அழகு, தொழிலாளர், இளமை முதலிய இருபது தலைப்புகள் இந்நூலில் இருபது அதிகாரங்களாக உள்ளன. திருவள்ளுவருக்குப்பின் இத்தகைய குறள் நூல் வெளிவந்ததில்லை. இளவழகனார் (அழகரடிகள்) உரையுடன் இது பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. நூல் நிலையங்களுக்கும் தமிழ் பயில்வார்க்கும் வாழ்க்கை இயக்கங்களுக்கும் ஏற்றது. கழகத்திற் கிடைக்கும்.

☆

அமரர் காந்தி

அன்றொருநாள் உலகமே துக்க சாகரத்தில் ஆழ்ந்தது. கற்றவரும் கல்லாத பாமரரும் பால்மணம் மாருத பச்சிளம் பாலகரும் கண்ணீர்வடித்த அந்தச் சோகதினம் நம் கண் முன்னே காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. நாட்கள் நகர்ந்துகொண்டே போனலும் சம்பவங்கள் நிழற்படமாகக் காட்சியளிக்கின்றன. பெற்ற தாயைப் பிள்ளை மறந்தாலும் உடலை உள்ளம் மறந்தாலும் கற்றதை கவிஞன் மறந்தாலும் கன்றை பசு மறந்தாலும், உத்தமன் காந்தியை உலகம் மறவாது என்பது நீங்களும் நானும் மறுக்க முடியாதல்லவா? இன்று நாடு நல்லவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறது. அவரின் அறவொழுக்கத்தையே நாடு நடைமுறையில் கொண்டுவருகிறது. ஆனல் அவரின் நல்லொழுக்கத்தில் ஒன்றை 'நாமும் கடைப்பிடிப் போமே' அப்படியானல் காந்தியே பேசுகிருர் கேளுங்கள்.

எனது திருட்டும் பிராயசித்தமும்

மனைவியென்பாள் கணவனுக்கு அடிமையல்ல அவள் ஒன்றுபட்ட உள்ள முடைய உற்ற நண்பனும் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் உரிமைபூண்ட துணைவியுமாவாள் என்பதை அறிந்தேன். சந்தேகங்களினல் இருண்டிருந்த அந்நாட்களை எண்ணும்போதும் காமக் குரோதங்களும் அதன் பலனல் நானடைந்த தவறுகளும் எனது நண்பனிடம் நான் கொண்டிருந்த குருட்டு நேசத்தையும் எண்ணும் போது வருந்துகிறேன்.

நான் புலால் உண்டகாலத்தும் அதற்கு முன்பும் நிகழ்ந்த குறைகளை சொல்வதற்கு பாக்கி இருககிறது. எனது திருமணத்திற்கு முன்போ அல்லது ஆன உடனேயோ இவை நிகழத் தொடங்கின. நானும் எனது நண்பரும் (உறவினரில் ஒருவர்) சுருட்டு பிடிப்பதில், ஆசைக்கொண்டோம். சுருட்டின் மணத்திலோ அல்லது அதில் நன்மையோ இருப்பதாகக் கருதி விரும்பவில்லை. சுருட்டு பிடிப்போர் வாயிலிருந்து வரும் சுருள் சுருளான புகை மண்டலத்தைக் கண்டே மோகமுற்ருேம். எனது சிறிய தந்தை சுருட்டு குடிப்பதுண்டு அவர் குடிப்பதைப் பார்த்து நாமும் குடிக்க வேண்டுமென்று நினைத்தோம். ஆனல் எங்களிடம் பண

மில்லை, எனவே சிறிய தந்தை குடித்து எறியும் சுருட்டுத் துண்டங்களைத் திருடிக் குடிக்க ஆரம்பித்தோம்.

காசும் திருட ஆரம்பித்தோம்

சுருட்டுத் துண்டுகள் எப்போதும் கிடைப்பதில்லை, கிடைத்தாலும் புகையும் அதிகமாக வருவதில்லை எனவே, எங்கள் வீட்டு வேலைக்காரனுக்குக் கொடுக்கும் இனம் காசிலிருந்து திருட ஆரம்பித்தோம். சுருட்டுகளும் வாங்கினேம் ஆனல் இவற்றைப் பெரியவர்களுக்குத் தெரியாமல் வைத்துக்கொள்வதும் குடிப்பதும் எப்படி என்பது பெரிய பிரச்னையாகி விட்டது.

இவ்வாறு திருட்டுக் காசைக்கொண்டு சிலதினங்கள் கழித்தோம். இதற்கிடையில் துவாரங்கள் உள்ள ஒருவகை செடியின் தண்டுகளைக்கொண்டு சுருட்டைப்போல் உபயோகிக்கலாம் என கேழ்விப்பட்டோம். உடனே செடியைத் தேடி, தண்டைப் புகைத்தோம்.

தற்கொலை தீர்மானம்

இவைகளிலெல்லாம் எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. பெரியவர்களின் உத்தரவின்றி சுதந்தரமாக எதையும் செய்ய முடியாதிருப்பதை எங்களால் சகிக்க முடியவில்லை. கடைசியாக வாழ்விலே வெறுப்படைந்து தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தோம். தற்கொலை செய்துகொள்ள விஷத்தை எப்படி பெறுவது? ஊமத்தஞ்செடியின் விதையில் விஷம் உண்டென்றும் கேள்விப்பட்டோம். எனவே, காட்டுக்குச் சென்று விதையைக் கொண்டுவந்தோம். மாலை நேரமே நல்ல வேளையென தீர்மானித்தோம். கேதார்ஜீ கோயிலுக்குச் சென்று விளக்கில் நெய் ஊற்றி தரிசனம் செய்துகொண்டோம். பின்னர் ஒரு மூலையில் உட்கார்ந்தோம். சமயத்தில் எங்கள் தைரியம் சரிய ஆரம்பித்தது உடனே மரணம் நேராவிடில் என்ன செய்வது, தற்கொலை செய்துகொள்வதால் பயன் என்ன? நாம் சுதந்திரமில்லாமலே வாழ்வது ஏன்? கூடாது? என்ற பல எண்ணங்கள் எழுந்தன. இடையே இரண்டு மூன்று விதைகளையும் விழுங்கிவிட்டோம், அதற்குமேல் எங்களுக்கு உண்டான மரண பயத்தினல், தின்ன மனம் துணியவில்லை. இருவரும் தற்கொலை செய்யும் எண்ணத்தை மாற்றி மன சாந்திபெற ராம்ஜீ கோயிலுக்குச் சென்ரேம். தற்கொலை செய்து கொள்வது என எண்ணுவதுபோல செயல்படுவது அவ்வளவு எளிதான

காரியமல்ல என்பதை உணர்ந்தேன். யாரேனும் தற்கொலை செய்துகொள்வேன் என்று பயமுறுத்தினால் நான் பயப்படுவதில்லை.

இந்தத் தற்கொலை முயற்சியின் பயனாக நாங்கள் சுருட்டு குடிப்பதையும், காசு திருடுவதையும் அடியோடு விட்டுவிட்டோம். எனக்கு வயது வந்தபின்னரும் சுருட்டு குடிப்பதை விரும்பவில்லை. அறுவறுப்பும் அசங்கியமானதென்றும் தீமையை விளைவிக்கும் என்றும் கருதி வந்திருக்கிறேன். சுருட்டு குடித்துக் கொண்டிருக்கும் சனங்கள் அதிகமான வண்டியில் என்னால் பிரயாணம் செய்ய முடிவதில்லை. மூச்சு திணறிப்போகும்.

தங்கம் திருடினேன்

மேலே சொன்ன திருட்டுக் குற்றம் என்னுடைய பனிரண்டாவது வயதிற்குமேல் அல்லது இன்னும் சிறு வயதிலோ நடந்தவை. அதைவிட பெரிய திருட்டுக் குற்றம் ஒன்றை செய்தேன், இம்முறை புலாலுண்ண, எனது சகோதரர் கையிலிருந்த கெட்டி தங்கத்தில் ஒரு துண்டை வெட்டி எடுத்தேன் எனது சகோதரர் பட்டிருந்த கடனையும் அடைத்தேன்.

ஆனால் இக்குற்றம் என்னால் பொறுக்கமுடியாததாயிற்று இனி எந்தக் காரணத்தைக்கொண்டும் திருடுவதில்லை. என தீர்மானித்தேன் மேலும் எனது தந்தையிடம் குற்றத்தை ஒப்புக்கொள்ள தீர்மானித்தேன். ஆனால் என் மனம் துணிவு பெறவில்லை. தந்தை அடிப்பாரே என்ற பயமில்லை. அவர் ஒருமுறைகூட எங்களில் எவரையும் அடித்ததாக ஞாபகமில்லை. அவருக்கு என் செய்கையால் ஏற்படும் மனத்துன்பத்தை எண்ணியே தயங்கினேன் பல எண்ணங்களுக்கிடையே, அவரிடம் எல்லா குற்றங்களையும் சொல்லி மன்னிப்பு கேட்டாலன்றி பாவம் தீராது என்ற முடிவுக்கு வந்தேன். கடைசியாக எல்லா குற்றங்களையும் எழுதி நேரிலேயே தந்தையிடம் கொடுத்தேன். குற்றத்தை ஒப்புக்கொண்டதன்றி அதற்குத் தகுந்த தண்டனையளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தேன். இனி திருடுவதில்லையென்றும் உறுதிகூறி இருந்தேன். தந்தையிடம் எனது கடிதத்தைக் கொடுத்தபோது எனது உடல் நடுங்கிற்று அவர் அப்போது பவுத்திர நோயினால் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையி லிருந்தார் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அவருக்கு எதிரில் உட்கார்ந்தேன்.

தந்தையின் கண்ணீர்

அக்கடிதத்தை முற்றும் படித்தார் படிக்கும்போதே அவரின் கண்களிலிருந்து முத்துமுத்தாய் தண்ணீர் தளும்பி வழிந்து கடிதத்தை நனைத்துக் கொண்டிருந்தது. ஒரு கண நேரம் கண்ணை மூடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார், பின்னர் கடிதத்தை கிழித்துப் போட்டார், உட்கார்ந்திருந்தவர் மீண்டும் படுத்துவிட்டார். நானும் அழலானேன். அவரது அளவுகடந்த மனவேதனையை உணர்ந்தேன். நான் ஒரு ஓவியனுக இருந்தால் பரிதாபகரமான இக்காட்சியைப் படமாக எழுதிவிடுவேன் இன்னும் எனது மனக்கண்முன் அக்காட்சி தெளிவாக காணப்படுகிறது.

தந்தையின் அன்பு கண்ணீரால், என் இருதயம் சுத்த மாயிற்று பாவம் நீங்கிற்று. அத்தகைய அன்பை அனு பவித்தால் மட்டுமே அதன் உணர்ச்சியை உணர்தல் கூடும் அன்பென்னும் மலர்க்கணையால் எய்தப் பெற்றவனே அதன் ஆற்றலை அறிய முடியும்.

இது அகிம்ஸா தர்மத்தின் அரிய உதாரண பாடமாக இருந்தது. அக்காலத்தில் இந்நிகழ்ச்சியின் மூலம் எனது தந்தையிடம் கண்ட அன்பை, உலகமுற்றும் தழுவும் அகிம் சையை காண்கிறேன். தொட்டதெல்லாம் பொன்னுக்கும் அகிம்ஸையின் ஆற்றலுக்கு அளவேது. எனது தந்தை, கடுஞ்சினம் கொள்வாரென்றும் நெற்றியில் புடைத்துக் கொள்வாரென்றும், அவரின் இயல்பைக்கொண்டு கருதி னேன். ஆனுல் அவரது சாந்தமும் என்பால் இரக்கங் கொண்டு கண்ணீர் உகுத்ததற்கு நான் அவரிடம் உண் மையை ஒப்புக்கொண்டு இனி எவ்வித குற்றமும் செய்வ தில்லையென்ற உறுதி மொழியும் அவரது எண்ணத்தை மாற்றி என்பால் அன்பிரக்கம்கொள்ளத் தூண்டியது. என் னைப்பற்றி எனது தந்தைக்கு கவலையே இல்லாமல் போய் விட்டது. என்னிடம் அவர் கொண்டிருந்த அன்பு அளவற்ற தாக இருந்தது.

(சத்திய சோதனையின் மொழிபெயர்ப்பு)

சுகாதாரமும் சுகவாழ்வும்

(அனுபவ மருந்துவம்)

★

சென்ற இதழில் தினசரி கடமைகள் என்பதைப்பற்றி எழுதினேம். அதை நாம் குறிப்பேட்டில் எழுதிக்கொள்வதோடு ஒவ்வொரு வீட்டிலும் அந்தக் கடமையை எழுதிய அட்டவணை தொங்கப்படவேண்டும். எல்லாரும் தங்களால் முடிந்ததை அனுசரிக்க வேண்டும்.

மழையைத் தடுக்கத்தானே குடை பிடிக்கிறேம் குடை முழுதும் பொத்தல் இருந்தால் மழையைத் தடுக்க முடியாதல்லவா? அதுபோலவே நாம்மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது. நாம் குடியிருக்கும் பகுதியும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமல்லவா? அப்படியானல் முதலில் சென்னை நகருக்கு வாருங்கள் 10×12. 8×10×6. இப்படி விசாலம் உள்ள அறைகளிலே கதிரவன் ஒளியைக் காணுத இருட்டறையிலே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் வசிக்கிருர்கள். அவர்களோடு கரப்பான் பூச்சிகள் பாசைகள் எலிகள் பெருச்சாளிகள் பல்லிகள் இவர்களும் சேர்ந்து வாழ்கிருர்கள் ஒரு வீட்டிலே பல குடும்பங்கள் காற்றுப் புகாத இருட்டறைகள் ஒருவித புழுக்கத்தின் நெடியும் தோன்றும். அதோடு தளவாட சாமான்கள் பழைய துணிகள் அழுக்குத் துணிகள் உதவாக்கரை சாமான்கள் சந்துகளில் அநேகநாள் கூட்டப்படாத குப்பைகள் அதில் ஊர்ந்து செல்லும் கரையான்கள் சிறு பாம்புகள் செய்யான்கள் யாவும் எட்டிப் பார்த்துகொண்டிருக்கும் எந்த இடத்தை நோக்கினுலும் போர்க்களத்தில் எடுப்பார் அற்று மடிந்து கிடக்கும் பிணங்கள்போல சாமான்கள் தட்டுகள் யாவும் போட்ட இடத்திலேயே கிடக்கும். அங்கு ஒரு வீச்சமும் அடிக்கிறது. படுக்கும் பாய்கள் தலையாணிகள் அழுக்கேறிய செக்குத் துணியாக காட்சியளிக்கும். அவை நினைத்த இடங்களில் காட்சி அளிக்கும், இந்த அலங்கோலங்களுக்கிடையே மேலே ஒட்டடை படிந்து முத்துசரங்கள் போல ஆடிக்கொண்டிருக்கும்.

நம்மோடு வசிக்கும் மேலே கூறிய ஊர்வன பறப்பன யாவும் இருட்டை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கும். படுக்கையை விரித்து உறக்கம் வரும் நேரத்தில் மூட்டைப் பூச்சியார் ஆட்சிசெய்ய ஆரம்பிப்பார். காசுக்குப் பஞ்சப் பாட்டுப்பாடி கவலையோடு தூங்கும்போது காற்றுப் பஞ்சம் வேறு ஆழ்ந்த மூச்சுவிட முடியாத சாக்கடை நாற்றம், இத்தனையும் பழக்க வழக்கத்தில் மீறி தூங்கிவிட்டாலும் பசியடங்கும் வரை குருதியை குடிக்கும் மூட்டைப்பூச்சியார் தயவு வைத்தால்தான் விடியும் நேரத்திலாவது தூங்கமுடியும். பாவ புண்ணியம் பரலோகத்தில் இருக்கிறதாகச் சொல்லும் நண்பர்கள் சென்னைக்கு வாருங்கள், நரகத்தின் நிலையைக் கண்டாவது உங்கள் அவிழ்த்துவிட்ட புளுகு மூட்டைகளை இருக்கிக் கட்டுங்கள். என்றுதான் நாம் ஆலோசனை கூறுவோம்.

இந்த நிலையில் வாழும் நடுத்தர குடும்பங்கள் நலிந்து காணப்படுவதையும் அடிக்கடி சலதோஷம் சுரம் இருமல் உருக்குநோய் இரத்தம் கெடுதல். போன்ற தொத்து நோய்களால் அவதிப்படுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இதற்கு என்ன செய்வது விசாலமான வீடுவேண்டும் என்றால் பொருளாதாரம் வேண்டும் . வெளிச்சம் வேண்டுமென்றால் வீட்டை இடித்து சன்னல் வைத்தாலும் முடியாது. அடுத்த வீட்டு சுவரை இடித்தால் அவர்கள் வீட்டு அறையைத்தான் பார்க்கலாம் தெருவைப் பார்க்க முடியாது. இதனாலும் பிரயோசனமில்லை. வேறென்ன செய்யலாம், இரு வீட்டு பின்புறத்திலே ஒரு தெருவை நிர்மாணிக்கவேண்டும். அப்போதுதான் வெளிச்சமும் காற்றும் பஞ்சமில்லாமல் கிடைக்கும் அதை யார் செய்வது?

சிறுகதை எழுத்தாளரும் அண்மையில் கண்ணீரும் தண்ணீரும் என்ற சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சர்க்காரால் 1000 ரூபாய் பரிசு பெற்றவருமான மருத்துவர் டொமினிக் ஜீவா அவர்கள் அடுத்த இதழிலிருந்து தொடர் கதை எழுதுவார்கள். சுவை நிறைந்ததும் படிக்கப் படிக்கத் திகட்டாததுமான அவரின் தொடர் கதையை எதிர்பாருங்கள்!

தமிழ்நாடு மருத்துவ மத்திய சங்க

பொதுச் செயலாளர்

திரு. M. A. இராமகிருஷ்ணன் அவர்களுக்கு

பாராட்டு கூட்டம்

ஓங்குக !! M. A. இராமகிருஷ்ணன் புகழ்
வளர்க !! மருத்துவர் மன்ற பத்திரிகை
வாழ்க !! S. S. விஸ்வநாத தாஸின் நாமம்

1—10—61 தேதி இராமநாதபுரம் தாலுக்கா மருத்துவர் சங்க கிளைச் சங்கக் கூட்டம் உச்சப்புளியில் அ. வாழ குரு வைத்தியர் தலைமையில் கூடப்பட்டது.

கூட்டத்திற்கு 10 கிளை சங்கத்தின் மெம்பர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு விஜயம் செய்த சங்க மெம்பர்களையும் சமூகப் பெரியோர்களையும் சங்கத் தலைவர் அ. சேவுகன் வரவேற்றுப் பேசினர்.

பிறகு கூட்டத்திற்கு விஜயம் செய்த இராமேஸ்வரம் மருத்துவர் சங்கத் தலைவரும் பண்டிதர் கூட்டுறவு சங்கத் தலைவருமான S. முருகப்பண்டிதர் பேசுகையில் நமது சமூகத்தினர் முன்னேற்றத்திற்காக அரும் பாடுபட்டு எத்தனையோ சிரமங்களுக்கு இடையில் மருத்துவர் மன்றம் என்ற பத்திரிக்கையை வெளியாக்கி அரிய கருத்துக்களை ஆங்காங்கு உள்ள மருத்துவர்கள் உள்ளங்களில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி நல்ல தருணத்தில் இப்பத்திரிகையை ஆரம்பித்த திரு. M. A. இராமகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டியும் இப்படிப்பட்ட ஒப்பெற்ற நம் சமூக சங்க பொதுச் செயலாளரைப் பெற்றது நம் தமிழ் நாட்டில் உள்ள மருத்துவர் செய்த மாபெரும் பாக்கியமே என்று குறிப்பிட்டார்.

மேலும் இராமேஸ்வரம் கொண்டேஸ்வர மடம் தர்ம கர்த்தாவும் முன்னாள் நடந்த தாலுக்கா மருத்துவர் சங்க வரவேற்புக் கமிட்டித் தலைவருமான நா. ஆ. கருப்பையா பண்டிதர் பேசுகையில் சமூகத்தில் உள்ளவர்கள் அவசியம் கட்டுப்பாடுடனும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப் பட்டு நடக்கவேண்டு மென்றும் கட்டுப்பாட்டின் காரணத்

தால்தான் தாலுக்கா சங்கம் இவ்வளவு நல்ல முறையில் இருப்பதாக குறிப்பிட்டார். மேலும் விருதுநகரில் நடக்கும் ஜில்லா மருத்துவர்கள் மகா நாட்டிற்குத் தாலுக்காவில் உள்ள ஒவ்வொரு மருத்துவர்களும் சங்கத்தார்களும் தாலுக்கா மருத்துவர் மகா நாட்டிற்கு ஒத்துழைப்பும் நிதியும் கொடுத்து உதவி புரிந்ததுபோல் எல்லோரும் ஜில்லா மகா நாட்டிற்கும் வேண்டிய உதவிகளை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொண்டார்.

இராமநாதபுரம் தாலுக்கா மருத்துவர் சங்கச் செயலாளர் திரு. மு. முத்துக் கருப்பன் பேசுகையில் எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின் மருத்துவ திலகம் S. S. விஸ்வநாத தாஸ் அவர்களின் சேவைகளையும் அன்னார் இந்நாட்டிற்கு செய்த சேவையை எடுத்துக்காட்டி அவர்கள் இந்த நாட்டிற்கு சேவைபுரிந்தும் யாரோ ஒரு நாடகக்காரர் என்ற முறையில் நினைத்திருந்த குறுகிய எண்ணம் கொண்டவர்களுக்கு விஸ்வநாததாஸ் அவரும் ஒரு மருத்துவர் சமுதாயத்தில் பிறந்து தனக்கெனவாழாது தேச விடுதலையே இன்நாட்டின் விடுதலை இந்நாட்டின் விடுதலையே நம் சமூக விடுதலை என நினைத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெள்ளையர் ஆட்சியில் சர்க்காரின் அக்கிரமங்களைப் பாடல் மூலம் பாடிப் புகழ்பெற்று சிறைச்சாலையே வீடாகக் கொண்டு கடைசி உயிர்போகும் தருவாயில் கூட தேசிய எண்ணத்தால் உயிர் துறந்த மருத்துவர் திலகம் மருத்துவர் குலத்திலே பிறந்த மகா கவி விஸ்வநாத தாஸின் வரலாற்றைக் கூறி அதற்கென தாங்கள் கருத்துக்களையும் பத்திரிக்கையின் 33-வது பக்கத்தில் கண்டபோது எங்கள் போன்ற சமூகத்தவர்களை தாங்கள் காட்டியுள்ள கருத்துக்கள் வருக வருக வென அழைக்கிறது. ஆகவே இதற்குக் காரணமாக இருந்து இவ்வளவு அரிய கருத்துக்களைச் செவிக் கினிய முறையில் நினைவூட்டும் திரு. M. A. இராமகிருஷ்ணன் அவர்களை வாழ்க பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன் என்றார்.

S. S. விஸ்வநாததாஸ் கருத்துக்களை விளம்பரத்தின் மூலம் தெரிந்தாலும் தாங்கள் அவசியம் S. S. விஸ்வநாததாஸ் வாழ்க்கை வரலாறு ஒன்று தயாரிக்கவேண்டு மெனவும் அன்னாரின் போட்டோவை பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுமெனவும் தாலுக்கா மருத்துவர் சங்கத்தின் சார்பில் M. A. இராமகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டியும் தாசின்

போட்டோ வெளியிட வேண்டுமாய் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தின் கடைசியில் சங்கக் காரியதரிசி K. காளிதாஸ் நன்றிகூற கூட்டம் முடிந்தது.

மு. முத்துகருப்பன்,

பொதுக் காரியதரிசி, இராமநாகபுரம் தாலுக்கா,
மருத்துவர் சங்கம் கிளை ஆபீஸ், இராமேஸ்வரம்.

இராமேஸ்வரம் மருத்துவர் சங்கத்தின் வேண்டுகோள்

இராமேஸ்வரத்தில் மருத்துவர்களுக்கென சங்கக் கட்டிடம் ஒன்று வாங்குவதற்குச் சகல நடவடிக்கைகளும் செய்யப்பட்டு வருகிறது. இவ்வூரானது அகில இந்திய புண்ணியஸ்தலமாக இருப்பதால் வரக்கூடிய நம் சமூகத்தினர் தங்குவதற்கு ஏதுவான முறையில் கட்டிடம் ஒன்று வாங்கப்போவதால் சமூகப் பெரியோர்களும் சலூன் வைத்திருக்கும் பெரியோர்களும் இளைஞர்களும் நிதி உதவி கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் நிதி அனுப்ப விரும்புவோர் மருத்துவர் சங்க தலைவர் இராமேஸ்வரம் என்று அனுப்பவும்,

★

செங்குன்றம் மருத்துவர் சங்கம்

31-10-61-ல் காலை 11 மணிக்கு ரெட்டில்ஸ் முசாபரிபங்களாவில் தமிழ்நாடு மருத்துவர் மத்திய சங்க பொதுச் செயலாளர் M. A. இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் P. பலராமன், M. முத்து, A. கதிர்வேலன், C. கிருஷ்ணன் வேணுகோபால் மற்றும் பலர் சமூகத்தின் பிளவு மனப்பான்மையைக் கண்டித்து சமூக வளர்ச்சிக்கு நாம் எல்லோரும் விட்டுக்கொடுத்து ஐக்யப்பட்டு நமது குறைபாடுகளை அகற்ற முன் வர வேண்டுமென கேட்டுக்கொண்டார்கள். தலைவர் முடிவுரையில் பல பெயர்களில் இயங்கும் சங்கங்கள் எவ்வித பலனையும் தராதென்றும் விரைவில் நாம் ஒரே பெயரில் சங்கம் அமைக்க எல்லா முயற்சியும் செய்யவேண்டும் என்றும் அதற்கு மற்ற சங்கங்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் நமது தொழிலை சிறு கைத்தொழில் பட்டியலில் சேர்க்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். மேலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மருத்துவ குலத்தினரால் விரைவில் கோவாப்ரேடிவ் சொசைடி பேங் நிறுவ முயற்சிக்கப்படும் என்றும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். சங்கத்தலைவர் கதிர்வேலன் நன்றிகூற கூட்டம் முடிந்தது. அடியிற்கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டது.

முடிதிருத்தும் தொழிலை சிறு கைத்தொழில் பட்டியலில் சேர்த்து சர்க்கார் கடனுதவி அளிக்கவேண்டும் என்றும் மருத்துவர் சமூகக் குறைபாடுகளை அறிந்து நிவர்த்தி செய்ய சர்க்கார் ஒரு அதிகாரியை நியமனம் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு மருத்துவர் மன்ற பத்திரிகையை வளர்க்க ஒவ்வொரு மாவட்ட மருத்துவர் சங்கமும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

நாட்டுக்கு நல்லவை

தமிழ் நாட்டில் சலவை தொழிலாளர் முடிதிருத்துவோருக்கு உதவ சர்க்கார் திட்டம்

ஜில்லாவிற்கு நூறுபேருக்கு தொழில் கருவி வழங்க உத்தேசமென மந்திரி கக்கன் தகவல்.

சென்னை செப்டம்பர் 26வ பரிட்சார்த்தமாக சேலம் ஜில்லாவில் சலவையாளர் முடிதிருத்துவோர் 40 பேர்களுக்கு ரூபாய் 40,000 நாற்பதினாயிரம் செலவில் தொழில் கருவிகள் வழங்கப்பட்டன வென்றும் குறைந்த பேர்களுக்கு வழங்கப் பட்டதால் அதிருப்தி ஏற்பட்டதென்றும் எனவே ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 100 பேர்களுக்குத் தொழில் கருவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அசெம்பிளி கேள்வி நேரத்தில் மந்திரி கக்கன் கூறினர்.

கூட்டுறவு முறையை பலப்படுத்த சர்க்கார் விரும்புகின்ற தெனவும் இந்த முறையில் சலவையாளர் தொழில் நடத்த முன் வந்தால் அதைப்பற்றிச் சர்க்கார் கவனிக்கும் எனவும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

(நவசக்தி 27-9-61)

தமிழ் நாட்டிலுள்ள சலவை தொழிலாளர் நிலைமையை அறிய அதிகாரி நியமனம்

தமிழ் நாட்டிலுள்ள சலவைத் தொழிலாளியின் நிலைமையை ஆராய ஸ்ரீ கண்டன் என்ற அதிகாரியை அரசாங்கம் நியமித்துள்ளது. அந்த அதிகாரியின் தலைமை அலுவலகம் சென்னையிலிருக்கும். இந்த வேலையை அவர் மூன்று மாதத்திற்குள் முடிக்க வேண்டும்.

ரிதம், கருத்தடைபற்றி பிரபல மருத்துவர் சம்மர்ன்கில் கோமகன் கருத்து

லண்டன் பிரபுக்கள் சபையில் சம்மர்ன்கில் கோமகன் பின்வருமாறு கூறினர்.

இந்த ரிதம் முறைப் பெண்களின் இயற்கையான இச்சைகளை தடுத்துவிடுவதால் இயற்கைச் சட்டத்திற்கு விரோதமானது விரும்பாதபோது சேர்க்கைக்கும் விரும்பியபோது ஒதுங்கியும் இருப்பது தாம்பத்திய ஒற்றுமையைப் பாதித்துவிடுவதோடு பசிக்கும்போது பட்டினியும் வேண்டாதபோது உணவுக்கொடுப்பது போல ஆகும். அதோடு இம்முறை நிச்சயமாகப் பலனளிக்கும் என்பது சந்தேகம்.

முப்பது ஆண்டுகள் மிஷின் சாணை பிடிப்பதில்
அனுபவம் வாய்ந்த

M. யூசப்

முடிதிருத்தும் கருவிகள் விற்பனையாளர்

குறைந்த விலை! தரம் நிறைந்த கருவிகள்.!! இங்கு இந்தியா, அமெரிக்கா, லண்டன், பிரான்ஸ், ஐப்பான் முதலிய நாடுகளில் செய்யப்பட்ட முதல்தரமான மிஷின், கத்தி, கத்தரி, சீப்பு, தீட்டுகல், சேவிங் பிரஷ், பன்னீர் பம்பு, நருமணமிகுந்த பவுடர், சுநோ, ஹேர் கிரீம், வாஸலைன் முதலிய முடியலங்கார நிலையங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் குறைந்த லாபத்திற்கே விற்கப்படுகிறது. முடி அலங்கார நவீன கருவிகள் வேண்டுவோர்களுக்கு ஆர்டர்மீது குறிப்பிட்ட நாட்களில் வரவழைத்துத் தரப்படும். விவரங்களுக்கு நேரில் ஒருமுறை வந்து பாருங்கள்.

M. யூசப்
நெ. 30, அரூடின் தெரு, சென்னை-5.

இளம் எழுத்தாளர்களுக்கு இடமுண்டு

சிறு கதைகள், கட்டுரைகள், உண்மை நிகழ்ச்சிகள் யாவும் தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி அனுப்பவும். பிரசுரிக்க இயலாததை திருப்பி அனுப்பப்படமாட்டாது. கதை கட்டுரைகள் தபால் மூலமே அனுப்பப்படவேண்டும். நேரில் பெற்றுக் கொள்ளப் படமாட்டாது.

—ஆசிரியர்.

மருத்துவர் குலத்தில் விதவை மணமகள் தேவை

30 வயது நிரம்பிய வாலிபருக்கு 25 வயதிற்கு மேற்படாத எழுதப் படிக்கத் தெரிந்த விதவை மணமகள் தேவை.

விவரங்களுக்கு: ஆசிரியர், திருமணப்பகுதி, 5/81, பிராட்வே சென்னை.



தமிழ்நாட்டில் தமிழர்கள் கலைகளிலே பல அற்புதங்க ... த்
திருப்பதை பார்க்கிறோம். அவைகளிலே கல்லும் இசை ... ற
மதுரை மீனாட்சி அம்மன் ஆலயமும் கலைநுணுக்கமும் வா ... ர
விதியையும் கணித்து வானத்தை அளவெடுக்கும் தஞ்சை இ ... ன்
கோபுரமும் திரிபுரமெரித்த நடராஜப் பெருமானின் நடன ... ன்
சிறப்பான ஒற்றைக் காலைத் தூக்கி ஆடி நடனக்கலை ... ர
உயர்த்திய வடிவங்களை சித்தரிக்கும் தில்லை சிதம்பரத்தின் ... க
ஆலயமும் மலையைக் குடைந்து கலையை உயர்த்திய மாமல ... ம்
பல்லவர் புகழும் தமிழ் நாட்டின் விலைமதிக்க முடியாத கலை ... ர்
கள் அல்லவா? பண்டைய பெருமைக்கு பங்கம் தராது. மக்கள் ... ற்
கிசைந்த மர சித்திர வேலைகளை சிறந்த சிற்பிகளைக் கொண்டு ... ப்
படும் கலா நிலையமே.

வேதகிரி பர்னீச்சர் மார்ட்

மக்கள் முகத்தை புத்தம் புதிய மலராக்கும் ஒப்பனையா
உங்கள் தொழிற்கூடங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும்
வாய்ந்த சிற்பக் கூடமாக வேண்டுமானால் இங்கே வாருங்கள்.

சலூன் நாற்காலிகள் மேஜைகள் சித்திர வேலைப்பா
வாசற்படிகள் சோபா செட்டுகள் கட்டில் படுக்கையறை செ
சிறந்த முறையில் செய்து தரப்படும்.

குறிப்பு—வெளியூர்களிலிருந்து வரும் ஆர்டர்களை வரிசை
செய்து அனுப்புவதால் தாமதத்திற்கு மன்னிக்கவும்.

வேதகிரி நியூ பர்னீச்சர் மார்ட்

மான் மார்க்கு சலூன் நாற்காலி உற்பத்தியாளர்,
136, வெங்கிடாசல முதலி தெரு, மீர்சாகிப்பேட்டை, சென்

சென்னை, திருப்பள்ளி வீதி, ரத்தினம் (கிளை) அச்சகத்தில்
V. திருநாவுக்கரசால் அச்சிடப்பட்டது. ஆசிரியரும், வெளியிடுபவரும்
M. A. இராமகிருஷ்ணன், 5/81 பிராட்வே, சென்னை.